கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்



ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை டிசம்பர் 2010 ₹ 15/-



## வைகுண்டத்திற்கான பாதை



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 2, இதழ் 9 டிசம்பர் 2010

2 வைகுண்டத்திற்கான பாதை

6 ஏகாதசி, விரதங்களில் முதன்மையானது

8 பிரபுபாதர் நூற்றந்தாதி

10 வயோதிகக் குரங்கின் விவேகம்

14 மரணத்திலிருந்து விடுபடுதல்

17 கடவுள் இருக்கின்றாரா?

20 பகவத் கீதை உண்மையுருவில், ஒரு கண்ணோட்டம்

26 புத்தக விநியோகம்

29 ஸ்ரீமத் பாகவதம்

## ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்*.

**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ராம கிங்கர தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** கேசவன்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ், சதீஷ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600 073. தொலைபேசி: (044) 22272920

**சந்தா அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

## கேள்விகளும் கருத்துகளும்

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# வைகுண்டத்திற்கான பாதை

**1975ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் தேதியன்று அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியா நகரில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி பிரபுபாதர், ரதயாத்திரையின் போது அருளிய உரை.**

பெரியோர்களே, தாய்மார்களே! இந்த பிலடெல்பியா நகரவாசிகளுக்கு முதற்கண் நன்றியை தெரிவிக்கிறேன். இந்த இயக்கத்தில் பங்கு பெற நீங்கள் மிகவும் ஆர்வத்துடன் உள்ளீர்கள். இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தை மேற்கத்திய நாடுகளில் பரப்ப எனக்கு உதவி புரியும் அமெரிக்க இளைஞர்களுக்கு நான் மிகவும் கடன்பட்டுள்ளேன். இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தை மேற்கத்திய நாடுகளில் பரப்ப வேண்டும் என்று என்னுடைய ஆன்மீக குரு எனக்குக் கட்டளையிட்டிருந்தார். எனவே, 1965ஆம் ஆண்டு நான் நியூயார்க் நகரத்திற்கு வந்தேன். பிறகு 1966இல் இந்த இயக்கம் நியூயார்க் நகரில் பதிவு செய்யப்பட்டு, 1967 முதல் அமெரிக்கா, ஐரோப்பா, கனடா, பசிபிக் கடலின் தென்புறம், ஆஸ்திரேலியா, மற்றும் உலகம் முழுவதும் வளர்ந்து வருகின்றது.

## ஜடவுலகமும் ஆன்மீக உலகமும்

இந்த இயக்கத்தைப் பற்றிய சில தகவல்களை நான் உங்களுக்கு வழங்குகிறேன். கிருஷ்ண என்னும் வார்த்தைக்கு "மிகவும் வசீகரமானவர்" என்று பொருள். கிருஷ்ணர் எல்லா உயிர்வாழிகளையும் கவரக் கூடியவர். மனிதர்களை மட்டுமல்ல; மிருகங்கள், பறவைகள், தேனீக்கள், மரங்கள், பூக்கள், பழங்கள், தண்ணீர் என அனைத்தையும் ஈர்க்கக்கூடியவர். இதுவே (ஆன்மீகமயமான) விருந்தா வனத்தின் காட்சி. ஆனால் நாம் தற்போது இருப்பதோ ஜடவுலகம். நமக்கு ஆன்மீக உலகைப் பற்றிய அனுபவம் இல்லை. இருப்பினும், ஜடம் என்றால் என்ன? ஆன்மீகம் என்றால் என்ன? என்பவை குறித்து சில கருத்துகளை நாம் தெரிந்துகொள்ள முடியும். ஓர் உயிருள்ள மனிதனுக்கும் இறந்த மனிதனுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். உயிர், அதாவது ஆத்மா உடலை விட்டு வெளியேறியவுடன் இவ்வுடல் இறந்துபோன ஜட வஸ்துவாகிறது. ஆத்மா இருக்கும் வரை உடல் முக்கியமானதாகும். எனவே, இந்த உடலில், ஜடம், உயிர்சக்தி என்று இரு வேறுபட்ட சக்திகள் இருப்பதை நாம் உணர் கிறோம். அதுபோலவே ஜடவுலகம், ஆன்மீக உலகம் என்று இரு வேறுபட்ட உலகங்கள் உள்ளன. உயிர்வாழிகளான நாம் ஒவ்வொருவரும் ஆன்மீக உலகத்தைச் சேர்ந்தவர்கள், இந்த ஜடவுலகைச் சார்ந் தவர்கள் அல்ல. எப்படி யோ நாம் இப்போது இந்த ஜடவுலகத்துடனும் ஜடவுடலுடனும் தொடர்பு கொண்டுள்ளோம். நித்திய உயிர்வாழிகளாக இருந்தபோதிலும், ஜடவுலகத் தொடர்பின் காரணத்தால், பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகிய நான்கு விதமானத் துன்பங்களை நாம் அனுபவித்தாக வேண்டும். இந்த ஜடவுலகில் நாம் அடையப்பெறும் உடல், மற்ற ஜடப் பொருள்களைப் போலவே ஒரு காலகட்டத்தில் முடிவிற்கு வருகின்றது. உதாரணமாக உங்கள் ஆடையை எடுத்துக் கொள்ளுங்கள்:



நீங்கள் அணியக்கூடிய ஆடை, கிழிந்து பயனற்றதாகிவிடும்போது, அதனை நீங்கள் எறிந்து விட்டு வேறொன்றை அணிகிறீர்கள். அதுபோலவே, இந்த ஜடவுடலானது ஆத்மாவின் உடையைப் போன்றதாகும். ஆனால் ஜடவுலகின்பால் நாம் பற்று கொண்டிருப்பதால், அதனை அனுபவிக்க எண்ணுகிறோம். அதனால், விதவிதமான உடல்கள் நமக்குக் கிடைக்கின்றன. இத்தகு உடல், ஓர் இயந்திரமாக பகவத் கீதையில் (18.61) கூறப்பட்டுள்ளது:


ஈஷ்வர: ஸர்வ-பூதானாம்
ஹ்ருத்-தேஷே (அ)ர்ஜுன திஷ்டதி
ப்ராமயன் ஸர்வ-பூதானி
யந்த்ராரூடானி மாயயா

“ஓ அர்ஜுனா, ஜட சக்தியால் செய்யப்பட்ட இயந்திரத்தில் அமர்ந்துள்ள எல்லா உயிர்வாழிகளின் பயணங்களையும், அவரவர் இதயத்தில் வீற்றுள்ள முழுமுதற் கடவுளே வழிநடத்துகின்றார்.”

## ஆன்மீகப் பரிணாம வளர்ச்சி

உயிர்வாழிகளான நாம் ஆசைப் படுகிறோம், அதை இறைவன் முடிவு செய்கிறார். மனிதன் ஆசைப்பட, கடவுள் அனுமதிக்கின்றார் என்று சொல்லப் படுவதுண்டு. கடவுள் மிகவும் கருணை யுள்ளவர். நீங்கள் எதை விரும்பு கிறீர்களோ அதை அவர் நிறைவேற்றுவார். “உலக ஆசைகள் உங்களைத் திருப்திப்படுத்தாது,” என்று அவர் நம்மிடம் கூறினாலும், நாம் அவற்றை விரும்புகிறோம். அத்தகு வெவ்வேறு ஆசைகளை நிறைவேற்ற கடவுள் நமக்கு விதவிதமான உடல்களை வழங்குகிறார். இதுவே கட்டுண்ட வாழ்க்கை அல்லது ஜட வாழ்க்கை எனப்படுகிறது.

நமது விருப்பத்திற்கு அப்பாற்பட்ட இந்த உடல் மாற்றம், பரிணாம வளர்ச்சி என்று அறியப்படுகிறது. இலட்சக்கணக்கான உடல்களைத் தாண்டி இறுதியில் நாம் மனித உருவிற்கு வருகிறோம். ஜலஜா நவ-லக்ஷானி ஸ்தாவரா லக்ஷ-விம்ஷதி: நாம் தண்ணீரில் ஒன்பது இலட்சம் வகையான உடல்களையும், மரம், செடி கொடிகளில் இருபது இலட்சம் வகையான உடல்களையும் கடந்து முன்னோக்கி வருகிறோம். இவ்வாறாக, நமது உணர்வுகளை வளரச் செய்யும் ஜட இயற்கை, படிப்படியாக இந்த மனித வாழ்க்கைக்கு நம்மைக் கொண்டுச் செல்கிறது. இந்த மனித வாழ்வில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களுடைய உணர்வு நிலை தற்போது நன்றாக வளர்ந்துள்ளது. ஆனால் மீண்டும் பரிணாம வளர்ச்சி முறைக்குச் செல்ல நீங்கள் விருப்பப்படுகிறீர்களா? அல்லது உயர் கிரகங்களுக்குச் செல்ல விருப்பப்படுகிறீர்களா? அல்லது கடவுளிடம், கிருஷ்ணரிடம் செல்ல விருப்பப்படுகிறீர்களா? அல்லது இங்கேயே தங்குவதற்கு விருப்பப்படுகிறீர்களா? இதனைத் தேர்ந்தெடுக்க பல்வேறு முறைகள் உள்ளன. பகவத் கீதையில் (9.25),



பலவித உயிரினங்களைக் கடந்து உணர்வு வளர்ச்சி பெற்ற பின்னரே ஒருவன் மனிதப் பிறவியை அடைகிறான். உணர்வு வளர்ச்சி பெற்ற நிலையில் மனிதன் செய்ய வேண்டியது என்ன?

**இது சாதாரண ஒரு மத இயக்கம் அல்ல. கடவுளிடம் சம்பந்தம் கொண்ட இயக்கம் என்பதால், மதம் சம்பந்தப்பட்ட இயக்கம் என்று நீங்கள் கூறலாம். ஆனால் இது விஞ்ஞானப்பூர்வமான இயக்கமாகும்.**

யாந்தி தேவ-வ்ரதா தேவான்
பித்ரூன் யாந்தி பித்ரு-வ்ரதா:
பூதானி யாந்தி பூதேஜ்யா
யாந்தி மத்-யாஜினோ பி மாம்

"தேவர்களை வழிபடுபவர்கள் தேவர்களிடையே பிறப்பர்; முன்னோர்களை வழிபடுபவர்கள் முன்னோர்களிடம் செல்வர்; பூதங்களை வழிபடுபவர்கள் பூதங்களிடம் செல்வர்; மேலும், என்னை வழிபடுபவரோ என்னுடனே வாழ்வர்."

இப்போது உங்கள் தேவையை நீங்களே தேர்வு செய்யலாம். நீங்கள் உயர் கிரகங்களுக்குச் செல்ல விருப்பப்பட்டால், அங்கு செல்லலாம், நீங்கள் இங்கேயே இந்த மத்திய கிரகங்களில் வசிக்க விரும்பினால், இங்கேயே இருக்கலாம். கீழ் கிரகங்களுக்குச் செல்ல விரும்பினால், அதையும் செய்யலாம். அல்லது நீங்கள் கடவுளிடம்—கிருஷ்ணரிடம்—செல்ல விரும்பினால், அங்கும் செல்லலாம். அஃது உங்கள் கையில்.

இந்த ஜடவுலகத்திற்கும் கிருஷ்ணரின் ஆன்மீக உலகத்திற்கும் என்ன வித்தியாசம்? ஆன்மீக உலகம் என்றால், அங்கு ஜடம் சம்பந்தப்பட்டவை இல்லை என்று பொருள். அங்கு எல்லாமே ஆன்மீகம்; மரங்கள், பூக்கள், பழங்கள், தண்ணீர், விலங்குகள் என எல்லாமே ஆன்மீகம். அங்கு அழிவு கிடையாது. மேலும், அந்த உலகம் நித்தியமானது. நீங்கள் ஆன்மீக உலகிற்குச் செல்ல விரும்பினால், இந்த மனித வாழ்க்கையை அதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தலாம். மாறாக, இந்த ஜடவுலகிலேயே இருக்க விருப்பப்பட்டால், அப்படியும் செய்யலாம்.

## துன்பத்தை நிறுத்துங்கள்

நமது வாழ்வில் தொடரும் பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் என்னும் கட்டுண்ட நிலையை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்தால் என்ன, என்று கேள்வி எழும்புகிறது. நாம் ஏன் இந்த ஜடவுடலில் இருந்து கொண்டு உடல் மாற்றங்களுக்கு உட்பட வேண்டும்? நாம் நமது உண்மையான, ஆதியான ஆன்மீக உடலைப் பெற வேண்டும், அதுவே நமது தேவை. அதுவே புத்திசாலித்தனம். வேதாந்த சூத்திரம் கூறுகிறது: *அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா*. மனித வாழ்க்கை பூரண உண்மையைப் பற்றி அறிவதற்காக உபயோகிக்கப்பட வேண்டும், அதுவே மனிதனின் புத்திசாலித்தனம். மாறாக, நாம் நம் வாழ்க்கையை விலங்குகளைப் போல வீணடித்து வருகிறோம். அவை உண்ணுகின்றன; நாமும் உண்ணுகிறோம். அவை உறங்குகின்றன; நாமும் உறங்குகிறோம். அவை ஆண்-பெண் உறவில் ஈடுபடுகின்றன; நாமும் அவ்வுறவில் ஈடுபடுகிறோம். அவை தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றன; நாமும் தற்காப்பில் ஈடுபடுகிறோம். இந்த நான்கும் மனித இனத்திற்கும் விலங்குகளுக்கும் பொதுவானவை. மனிதப் பிறவியின் மிகவும் சாதகமான விஷயம் என்னவெனில், மனிதன் விருப்பப்பட்டால் பிறப்பு இறப்பு சூழ்நிலையிலிருந்து விடுபட்டு இறைவனின் திருநாட்டிற்குத் திரும்பிச் செல்ல முடியும். அங்கு செல்வதற்கான விஞ்ஞானத்தை மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதே இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தின் திருப்பணியாகும்.

இது சாதாரண ஒரு மத இயக்கம் அல்ல. கடவுளிடம் சம்பந்தம் கொண்ட இயக்கம் என்பதால், மதம் சம்பந்தப்பட்ட இயக்கம் என்று நீங்கள் கூறலாம். ஆனால் இது விஞ்ஞானப்பூர்வமான இயக்கமாகும். பெரிய விஞ்ஞானிகள், தத்துவவாதிகள் மற்றும் சிந்தனையாளர்கள் இந்த இயக்கத்தைப் புரிந்துகொள்ள முயல வேண்டும். அவர்களை உணர வைப்பதற்கு எங்களிடம் அறுபதுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. விஞ்ஞானப்பூர்வமாகவும் தத்துவப் பூர்வமாகவும் நீங்கள் இந்த இயக்கத்தின் மதிப்பைத் தெரிந்து கொள்ள ஆசைப் பட்டால், எங்களிடம் போதுமான அளவு விஷயங்கள் உள்ளன. இது மிகவும் சுலபமானது.

## ஹரே கிருஷ்ண மஹா மந்திரம்

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

என்னும் இந்த மந்திரத்தை ஜெபம் செய்தால் போதும், பிறகு எல்லாமே உங்களுக்குப் புலப்படும். *சேதோ தர்பண மார்ஜனம்*, இந்த ஹரே கிருஷ்ண மந்திர ஜெபமானது உங்களுடைய இதயத்தில் உள்ள களங்கங்களைத் தூய்மைப்படுத்துகிறது. நமது இதயம், மனம், மற்றும் உணர்வானது தற்போது பல்வேறு களங்கங்களால் கவரப்பட்டுள்ளது. எனவே, நாம் இந்த ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை ஜெபம் செய்தால், இந்த களங்கங்கள் கழுவப்படுகின்றன. அதன் பிறகு, "நான் யார்? என்னுடைய நிலை என்ன? என்னுடைய வாழ்வின் குறிக்கோள் என்ன? நான் என்ன செய்ய வேண்டும்?" என்று நம்மால் நினைத்துப் பார்க்க முடியும். இதுவே மனித வாழ்வின் கவனிக்கத்தக்க அம்சம்; விலங்குகளால் அவ்வாறு நினைத்துப் பார்க்க இயலாது.

இந்த இளைஞர்கள், உங்கள் நாட்டைச் (அமெரிக்காவைச்) சேர்ந்தவர்கள் மட்டுமல்ல; ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஆசியா என பல பகுதிகளைச் சார்ந்த இவர்கள் இந்த தத்துவத்தைப் புரிந்து கொண்ட உடனேயே இந்த இயக்கத்தில் சேர்கிறார்கள். இது

கடினமானது அல்ல. இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தைக் கொடுப்பதற்கு நாங்கள் பணம் கேட்பதில்லை. நாங்கள் எல்லா இடங்களிலும் இம்மந்திரத்தினை கீர்த்தனம் செய்கிறோம். எங்களிடம் இருக்கும் ஒரே உபாயம், இந்த ஹரே கிருஷ்ண மந்திரம் மட்டுமே. ஆயிரக்கணக்கானோர் எங்களைப் பின்பற்றுகிறார்கள். எனவே, ஹரே கிருஷ்ண மந்திரத்தின் சக்தி என்ன என்பதை நீங்களே புரிந்துகொள்ளலாம். எங்களைப் பின்பற்றுவதற்கு இங்குள்ள இளைஞர்களுக்கு நாங்கள் எதுவும் தருவதில்லை. நாங்கள் அனைவரும் இணைந்து ஹரே கிருஷ்ண என்று பாடுகிறோம்.

## ஆன்மீக உலகிலிருந்து வரும் தெய்வீக ஒலி

கௌடிய வைஷ்ணவ சம்பிரதாயத்தின் சிறந்த ஆச்சாரியர்களில் ஒருவரான நரோத்தம தாஸ தாகூர், *கோலோகேர ப்ரேம-தன, ஹரி-நாம-ஸங்கீர்த்தன* என்று பாடியுள்ளார். இந்த ஹரே கிருஷ்ண ஜெபம், ஜடத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல. இது நேரடியாக ஆன்மீக உலகத்திலிருந்து வருகிறது. எனவே, இதைப் பாடுவதால் சோர்வடைய மாட்டீர்கள். நீங்கள் இதை நடைமுறையில் பார்க்கலாம். இருபத்தி நான்கு மணி நேரமும் ஹரே கிருஷ்ண ஜெபம் செய்து கொண்டே போகலாம். நீங்கள் சோர்வடைய மாட்டீர்கள். இந்த ஜெபத்தின் ஒலியதிர்வுகள் ஆன்மீக உலகத்திலிருந்து வருகின்றன. எவ்வாறு நீங்கள் தொலைதூரத்தில் இருந்து வரும் ஒலியதிர்வுகளை வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டியின் மூலம் கேட்கிறீர்களோ, அதுபோன்று ஆன்மீக உலகத்திலிருந்து வரும் ஒலியதிர்வுகளான ஹரே கிருஷ்ண மந்திரத்தினை நாம் நமது இதயத்தில் பெற முடியும்.

## எங்களின் வேண்டுகோள்

இந்த ஜடவுலகம் நமக்குப் பொருத்தமில்லாத இடம். இங்கு ஒவ்வொருவரும் நிச்சயமற்ற நிலையில் வாழ்கிறோம். நீங்கள் எவ்வளவு செல்வமுடையவராக இருந்தாலும், எவ்வளவு சக்தி வாய்ந்த நபராக இருந்தாலும், உறுதியற்ற நிலைகள் கண்டிப்பாக உண்டு. உங்கள் ஜனாதிபதியான நிக்சனை பலரும் பதவி விலகச் சொன்னபோது, அவர் எவ்வளவு உறுதியற்ற சூழ்நிலையில் இருந்திருப்பார்? இந்த ஜடவுலகில் நீங்கள் எந்தப் பதவியில் இருந்தாலும், அஃது ஒரு பொருட்டல்ல. அங்கும் உறுதியற்ற நிலை அவசியம் இருக்கும். எனவே, இவ்வுலக வாழ்க்கை கொழுந்துவிட்டு எரியும் நெருப்பைப் போன்றது. நீங்கள் இந்த வசதியற்ற உறுதியற்ற நிலையிலிருந்தும் மனக் கவலையிலிருந்தும் விடுதலை அடைய விரும்பினால், கண்டிப்பாக ஹரே கிருஷ்ண மந்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இஃது எங்கள் வேண்டுகோள். இதில் முயற்சி செய்தால், நீங்கள் நேரடி பலனைப் பெறலாம். இதற்காக நீங்கள் செலவிட வேண்டியதில்லை; எந்த இழப்பும் இல்லை.

எனவே, எங்களுடைய அன்பான வேண்டுகோள் இதுவே. இரு கைகளையும் கூப்பி உங்களை வேண்டிக் கொள்கிறோம். நாங்கள் எதையும் புகுத்த விரும்பவில்லை. மூன்று மணி நேர ஊர்வலத்தை நீங்கள் தற்போது பார்த்தீர்கள்; எவ்வளவு மக்கள் வந்தார்கள்! ஆனால் எந்தவித அசம்பாவிதமும் இல்லை. உங்கள் நாட்டின் காவல் துறையினர் எங்களைப் பெரிதும் பாராட்டுகின்றனர். ஏனெனில், அவர்களது அனுபவத்தில் எந்தவொரு ஊர்வலமாக இருந்தாலும் அங்கு வன்முறை நிச்சயம், ஆனால் நாங்கள் அத்தகையோர் அல்ல, எங்களின் இந்த ரதயாத்திரைத் திருவிழா, உங்களை அழைப்பதற்கு மற்றொரு சந்தர்ப்பமாகிறது. எங்களுடைய ஒரே வேண்டுகோள்: இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜெபம் செய்யுங்கள், நீங்கள் மிகவும் ஆனந்தமாக இருப்பீர்கள். உறுதியற்ற சூழ்நிலையோ பயமோ இருக்காது. நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை தொடர்ந்து ஜெபித்தால், மேன்மேலும் சந்தோஷத்தை அடைவீர்கள். ஆன்மீக வாழ்க்கையின் எல்லா விஷயங்களும் உங்களுக்குப் புரிய வரும், மிகச் சுலபமாக இறைவனின் திருநாட்டிற்குத் திரும்பிச் செல்லலாம். மிக்க நன்றி.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)




எங்களுடைய ஒரே வேண்டுகோள்: இந்த ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜெபம் செய்யுங்கள், நீங்கள் மிகவும் ஆனந்தமாக இருப்பீர்கள்.

# ஏகாதசி,
# விரதங்களில் முதன்மையானது

### ஏகாதசி தோன்றிய கதை

(பத்ம புராணம் உத்தர காண்டம் அத்தியாயம் 36இல் இருந்து எடுக்கப்பட்டது)

கிருத யுகத்தில் வாழ்ந்து வந்த முராசுரன் என்னும் கொடூர அசுரன், தேவர்களைத் துன்புறுத்தி அவர்களை ஸ்வர்கத்திலிருந்து விரட்டினான். இந்திரனின் தலைமையில் எல்லா தேவர்களும் கரம் குவித்து, துதி பாடி, பாற்கடலில் பள்ளி கொண்ட சுதர்சனம் ஏந்திய கருட வாகனர் ஸ்ரீ விஷ்ணுவிடம் தங்களது குறைகளை முறையிட்டனர்.

அசுரனின் கொடுமைகளைக் கேட்ட பகவான் விஷ்ணு தேவர்களுக்கு உதவுவதாக உறுதியளித்து, முராசுரனுடன் போரிட்டார். தனது அம்புகளாலும் சுதர்சனத்தினாலும் அசுர சேனைகளை விரட்டியடித்தார். நீண்ட காலம் நடைபெற்ற அந்த யுத்தத்தின் நடுவில், பகவான் விஷ்ணு பத்ரிகாஷ்ரமத்தில் உள்ள ஹேமவதி என்ற குகைக்குள் ஓய்வெடுப்பதற்காகச் சென்றார். அவரைத் தேடி அங்கு வந்த முராசுரன், (தெய்வீக) உறக்கத்திலிருந்த விஷ்ணுவிடம் போரிட விரும்பியபோது, ஸ்ரீ விஷ்ணுவின் உடலிலிருந்து, பற்பல ஆயுதங்களுடனும் அஸ்திரங்களுடனும் ஓர் அழகான மங்களகரமான மகள் தோன்றினாள். அசுரனுடன் தொடர்ந்து போரிட்ட தேவி, இறுதியில் அவனது தலையை வெட்டி வீழ்த்தினாள்.

பகவான் விஷ்ணு துயிலெழுந்த போது, முராசுரன் மரணமடைந்திருப் பதையும், தன்முன் கூப்பிய கரங்களுடன் இருக்கும் தேவியையும் கண்டு, “நீ யார்?” என்று வினவினார். “தங்கள் உடலிலிருந்து தோன்றியவள் நான், உறக்கத்திலிருந்த தங்களை இந்த அசுரன் கொல்ல முயன்றதால், நான் இவனைக் கொன்று விட்டேன்,” என்று அவள் பதிலளித்தாள். மகிழ்ச்சியுற்ற பகவான், “என்னுடைய ஆன்மீக சக்தியான நீ, ஏகாதசி (பதினொன்றாவது) திதியில் தோன்றியதால், ஏகாதசி என்று அழைக்கப்படுவாய். நீ தோன்றிய நாளில் விரதம் இருப்பவர்கள் எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் விடுபட்டு பக்தி நிலையை அடைவர்,” என்று வரம் நல்கினார். பின்னர், சிறப்பு வாய்ந்த இந்த ஏகாதசி, ஒவ்வொரு மாதத்திலும் இருமுறை வெவ்வேறு ரூபங்களில் தோன்றினாள்.

## வைகுண்ட ஏகாதசி

வைகுண்ட ஏகாதசி அல்லது மோக்ஷத ஏகாதசி என்று அறியப்படும் ஏகாதசி, எல்லா ஏகாதசிகளிலும் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த ஏகாதசியில் விரதம் இருந்தால் அது மற்றெல்லா ஏகாதசி விரதத்திற்கும் சமமானது என்று விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டுள்ளபோதிலும், எல்லா ஏகாதசிகளிலும் விரதம் இருத்தல் என்பது வைஷ்ணவ மரபில் அவசியமான ஒன்றாகும்.

சமஸ்கிருதத்தின் மார்கஷீர்ஷ மாதத்தின் வளர்பிறையில் வரும் ஏகாதசி, மோக்ஷத ஏகாதசி என்று பொதுவாகக் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் மார்கழி மாதத்தின் வளர்பிறையில் வரும் ஏகாதசியே மோக்ஷத ஏகாதசி



வைகுண்ட வாசலில் எழுந்தருளும் நம்பெருமாள்.
இடம்: ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோவில்

எனப்படுகிறது. சந்திரனை அடிப்படையாகக் கொண்ட சமஸ்கிருத மாதங்களுக்கும் சூரியனை அடிப்படையாகக் கொண்ட தமிழ் மாதங்களுக்கும் சற்று வேறுபாடு இருப்பதால், சந்திர நாள்காட்டியின் மோக்ஷத ஏகாதசியும் சூரிய நாள்காட்டியின் மோக்ஷத ஏகாதசியும் சில நேரங்களில் மாறி வருவது வழக்கம். இந்த முறை அவை இரண்டும் ஒரே நாளில் (டிசம்பர் 17) வருவது சிறப்பே. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்தது, மோக்ஷத ஏகாதசியன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வைகுண்ட வாசல்

வைகுண்ட ஏகாதசி அன்று ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயில், திருப்பதி பாலாஜி கோயில் உட்பட பல்வேறு வைஷ்ணவ திருத்தலங்களில் மக்கள் கூட்டம் அலைமோதுவது வழக்கம். அன்றைய தினத்தில் வைகுண்ட துவாரம் திறக்கப்படுவதாக ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் கூறுகின்றது.

வைகுண்ட வாசல், சில நேரங்களில் "ஸ்வர்க வாசல்" என்று அழைக்கப்படுவதுண்டு. ஆனால் அது முற்றிலும் தவறு. முழுமுதற் கடவுளான பகவான் நாராயணர் வீற்றிருக்கும் இடம் வைகுண்டம்; அதாவது, கவலைகளற்ற இடம் என்று அழைக்கப்படுகிறது. வைகுண்ட பிராப்தி அடைந்தவர்கள், பிறப்பும் இறப்பும் கொண்ட இந்த பௌதிக உலகத்திற்குத் திரும்புவதில்லை. நாம் வாழும் பூலோகத்திற்குச் சற்று மேலே தேவர்கள் வசிக்கும் இடம் ஸ்வர்கம் எனப்படுகிறது. ஸ்வர்க லோகமும் இப்பௌதிக உலகைச் சார்ந்ததே என்பதால், ஸ்வர்க லோகத்தை அடைந்தவர்கள் மீண்டும் மீண்டும் பிறவியெடுக்க வேண்டியது நிச்சயம். எனவே, வைகுண்ட வாசல் என்பதை ஸ்வர்க வாசல் என்று அழைப்பது பொருத்தமற்றதாகும்.

## ஏகாதசி விரதம்

ஒரு மாதத்தில் இரண்டு ஏகாதசிகள் உள்ளன: அமாவாசைக்குப் பின் பதினொன்றாவது நாள், பௌர்ணமிக்குப் பின் பதினொன்றாவது நாள். ஏகாதசி என்னும் சொல்லுக்கு, "பதினொன்றாவது நாள்" என்று பொருள். ஏகாதசி என்பது அனைத்து பக்தர்களும் விரதம் அனுசரிக்க வேண்டிய திருநாளாகும். இதில் தவறுவது மிகப்பெரிய குற்றம். ஏகாதசியன்று கொடூரமான பாவங்கள் தானியங்களில் தங்குவதால், உன்னத நன்மையைப் பெற விரும்புவோர், அன்றைய நாளில் தானியங்களைத் தவிர்த்து, விரதம் அனுசரித்தல் அவசியம்.

லௌகீக வாழ்வில் இன்பமடைவதற்கும் பொருள் சேகரிப்பதற்காகவும் ஏகாதசியைப் பின்பற்றுதல் கூடாது. ஏகாதசி விரதமானது முழுமுதற் கடவுளான ஸ்ரீ ஹரியைத் திருப்தி செய்வதற்காக மட்டுமே பின்பற்றப்பட வேண்டும். ஏகாதசி விரதத்தை அனுசரிப்பதால் வரக்கூடிய பல்வேறு பௌதிக நன்மைகள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளபோதிலும், இதன் முக்கியமான பலன், முழுமுதற் கடவுளின் மீது ஆழமான அன்பை வளர்த்துக் கொள்வதே என்பதை நாம் அறிந்துகொள்ளுதல் அவசியம்.

நூறு பிறவிகளில் சேர்ந்த பாவங்கள் ஒருமுறை ஏகாதசியை அனுசரிப்பதால் விலகிவிடும். மேலும், ஏகாதசி திருநாளில் பகவான் ஸ்ரீ விஷ்ணுவைப் பற்றி (குறிப்பாக, ஸ்ரீமத் பாகவதம், மற்றும் பகவத் கீதையிலிருந்து) கேட்பவர்கள், மிகவுயர்ந்த பலனை அடைவர். பாம்புகளில் *அனந்தரும்*, பறவைகளில் *கருடனும்*, மரங்களில் *ஆல மரமும்*, இலைகளில் *துளசி இலையும்* சிறப்பானதாகத் திகழ்வதைப் போன்று, விரதங்களில் ஏகாதசி விரதமே மிகச்சிறந்ததாகும்.

## விரதம் அனுசரிக்கும் முறை

(ஸ்ரீபாத் பக்தி விகாஸ ஸ்வாமி அருளிய "பக்தி யோகம்—ஓர் அறிமுகம்" என்னும் புத்தகத்திலிருந்து)

ஸ்ரீல பிரபுபாதர் சாஸ்திரங்களின் பரிந்துரைப்படி, தானியங்கள், பீன்ஸ், பருப்பு வகைகள், பயிறு வகைகள் ஆகியவற்றை உண்ணாமல் எளிய முறையில் விரதம் இருந்தார். சில பக்தர்கள் ஏகாதசியன்று பழங்கள் மட்டும் உண்பர், சிலர் நீர் மட்டும் பருகுவர், சிலர் நீர்கூட அருந்த மாட்டார்கள். (இதற்கு நிர்ஜல விரதம் என்று பெயர்)

அனைத்து பக்தர்களும் பின்வரும் உணவுப் பொருள்களை ஏகாதசியன்று அறவே தவிர்க்க வேண்டும்: எல்லாவிதமான தானியங்கள், பருப்பு, பயிறு வகைகள், பீன்ஸ் போன்ற காய்கள், கடுகு, இவற்றிலிருந்து தயாரித்தவை (கோதுமை மாவு, கடுகு எண்ணெய், இத்யாதி), மற்றும் இவை அடங்கிய உணவுப் பொருள்களைத் தவிர்க்க வேண்டும். பொடி செய்யப்பட்ட நறுமணச் சரக்குப் பொருள்களைப் பார்த்து வாங்கவும். அவற்றில் மாவு கலந்திருந்தால் ஏகாதசியன்று பயன்படுத்தக் கூடாது.

ஏகாதசியன்று சவரம் செய்து கொள்வதும் நகம் வெட்டுவதையும் தவிர்த்தல் அவசியம்.

ஏகாதசி விரதமானது, மறுநாள் துவாதசி அன்று முடிக்கப்படுகிறது. தானியங்களால் தயார் செய்த பிரசாதத்தை உண்டு விரதத்தை முடிக்கலாம். குறிப்பிட்ட காலத்திற்குள் விரதம் முடிக்கப்பட வேண்டும். ஏகாதசி நாள்களையும் விரதம் முடிக்க வேண்டிய நேரத்தையும் அறிய, கௌடீய வைஷ்ணவ நாள்காட்டியைப் பார்க்கவும் (ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தில் ஒவ்வொரு மாதமும் வெளியிட்டு வருகிறோம்). இஸ்கானில் பயன்படுத்தப்படும் வைஷ்ணவ நாள்காட்டியை மட்டும் உபயோகிப்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், ஏகாதசி நாள்களும் பிற விசேஷ நாள்களும் மற்ற சம்பிரதாய பண்டிதர்களின் கணிப்பில் சற்று மாறுபடலாம். ஏகாதசி விரதத்தின் உண்மையான குறிக்கோள், வெறுமனே உண்ணாமலிருப்பது அல்ல; கோவிந்தனைப் பற்றிக் கேட்கவும் சொல்லவும் மிகுந்த நேரம் ஒதுக்குவதே. ஏகாதசியன்று போதுமான நேரமுடைய பக்தர்கள் இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட சுற்று ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜெபம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீல பிரபுபாதர் கூறியுள்ளார்.

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த ''பிரபுபாதர் நூற்றந்தாதி''. எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டுள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.

**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

## பகுதி 4

காண்கின்ற மேற்குக் கடற்கரை மெச்சிடத்
தூண்கள் அமைத்தார் துதிபாடக்– காண்பவர்
தொட்டிடக் கூட்டினார் தேர்வலம் பூரியர்போற்
பட்டாங்கைக் கண்டு படிந்து. (37)

அமெரிக்க நாட்டின் மேற்குக் கடற்கரைப் பெருநகரங்களில் காண்பவர்கள் மெச்சும் படியாக கண்ணன் பேர்பாட மையங்கள் அமைத்தார். காண்பவர்கள் எல்லோரும் தொட்டு இழுத்திட ஜெகந்நாதர் தேர்வலம் கூட்டினார். ஜெகந்நாத பூரியில் உள்ளவர்களைப் போல் சாத்திரத்தில் கண்டபடி தேர்விழா கொண்டாடினார்.

படிந்தநற் சீடரைப் பாகவத தர்மம்
கடிந்து பரப்பக் கவர்ந்தார்– படிந்தார்
சுமைகள் உவந்தேற்றுச் சுற்றி உலகில்
அமைத்தார்சீர் மையங்கள் ஆய்ந்து. (38)

தன்னிடம் படிந்த சீடர்களை பாகவத தர்மத்தை உலகில் விரைந்து பரப்புவதற்காகக் கவர்ந்தார். அவ்வாறு படிந்த சீடர்கள், கடினமான பொறுப்புகளையும் உவந்து ஏற்று, உலகம் முழுவதும் சென்று, சீர்மிகும் மையங்களை ஆராய்ந்து அமைத்தனர்.

ஆய்ந்தமைந்த மையங்கள் ஆண்பெண் மகிழ்வோடு
பாய்ந்து பரவசமாய்ப் பாடிடவும்– தூய்மை
தரும்பக்தி நெஞ்சத்துட் தங்கிடவும் நிற்கும்
பெருமுபயம் போற்றப் பொலிந்து. (39)

அவ்வாறு அமைந்த மையங்கள், ஆண் பெண் இருபாலரும் மகிழ்வோடு கண்ணன் திருநாமத்தைப் பாடி ஆடுவதற்கும், தூய்மை தரும் பக்தியினை நெஞ்சில் நிறுத்துவதற்கும் பெரும் உபயமாகத் (உதவியாகத்) திகழ்கின்றன; மேலும், பலரும் போற்றும்படியாகப் பொலிந்து நிற்கின்றன.

பொலிந்தாங்கு கண்ணன் புகழ்பாடல் ஆழ்வார்
பொலிந்தாங்கு பாடுதற் போற்றும்– கலிகை
நலிந்தாங்கு நிற்றல் நமதபயர் நன்கு
வலிந்தாங்கு சென்ற விளைவு. (40)

அம்மையங்களில் கண்ணனுடைய புகழைச் சிறப்பாகப் பாடுதல், நம்மாழ்வார் ''பொலிக பொலிக'' என்று பாடியிருப்பதைப் போற்றுவதாகும். ஆங்கே கலியானது தன் கை நலிந்து நிற்றல், நமது அபயர் வலிந்து அமெரிக்கா சென்று மையங்கள் அமைத்து உலகம் முழுக்கப் பரவச் செய்ததன் விளைவே ஆகும்.

விளைவுகள் எல்லாம் வழிவகுப்பான் சித்தம்
இளையாது செய்வேன் இனிப்பா– தளைந்திடத்
தேரோட்டம் நின்று திருமாலைப் போற்றுதற்போல்
ஓரோட்டம் என்பேன் உவந்து. (41)

விளைவுகள் எல்லாம் நமக்கு நல்ல வழி வகுப்பவனான கண்ணனுடைய சித்தம் ஆகும். நான் தொடர்ந்து அவனருளால் தாழாது பாடல் எழுதுவேனாக. பிரபுபாதரின் வாழ்க்கை சரித்திரத்தைப் பாடலாக எழுதும்போது ஆங்காங்கே நிறுத்திப் புகழ்தல், திருமாலைத் தேரோட்டத்தின்போது தளைந்து நிறுத்திப் போற்றுதலைப் போலாகும்.



அனைவரும் கிருஷ்ணரின் திருநாமங்களைப் பாடி
ஆடுவதற்காக நடைபெற்ற தேர்த் திருவிழாவின் காட்சி

**உவந்துவே தாந்தர் உரையுலகிற் தந்தார்**
**எவரும் எளிதில் உணர– அவர்தம்**
**கருணையால் அன்றோயாம் கற்கின்றோம் கீதை**
**இருமைகள் வெல்ல இனிது. (42)**

வேதாந்தர் (பிரபுபாதர்) அவர்கள் மிகவும் விரும்பி, பகவத் கீதை உண்மையுருவில் என்னும் எளிய உரையை உலக மக்களுக்குத் தந்தார். அவ்வாறு அவர் காட்டிய கருணையால், இருமைகளை வெல்லும்படியாக நாம் இனிது கீதை கற்கின்றோம்.

**இனிதினிது பாகவத இன்னுரையாம் உய்யத்**
**தனிக்கருணை செய்தார்தாட் தாழ்வோம்– கனிமொழிகட்**
**கண்ணுற்றார் நிற்பரோ காமுறா நெஞ்சொடு**
**கண்ணுற்றேன் காதலால் யான். (43)**

பாகவதத்திற்கு பிரபுபாதர் எழுதிய உரையானது மிகவும் இனிமையானது. தனிக்கருணை காட்டிய அவருடைய பாதங்கள் பணிவோம். அவருடைய மொழிபெயர்ப்பிலும் பொருளுரையிலும் உள்ள இனிமையான சொற்களைக் கண்டவர்கள் உள்ளத்தைப் பறிகொடுக்காமல் இருக்க முடியாது. நான் அவ்வாறு ஆனேன்.

**யான்என தென்ப தறுத்துயர் யாதவனின்**
**வான்செல்ல வல்ல வழிவகுத்தார்– யான்சொல்ல**
**வண்ணமொழி காணேன்மன், வாழ்கபக்தி வேதாந்தர்**
**பண்புமொழி, பாகவதப் பேர். (44)**


"யான், எனது" என்னும் அகங்கார மமகாரங்களை அறுத்து, யாதவக் கண்ணனின் இடத்திற்குச் செல்ல பிரபுபாதர் வழிவகுத்தார். சொல்லிப் புகழ்வதற்கு உயர்ந்த சொற்கள் எனக்குத் தெரியவில்லை. பக்திவேதாந்தருடைய பண்புடைய சொற்கள் வாழ்க, ஒப்பற்ற பாகவதர் என்கின்ற புகழ் வாழ்க.

**பேர்பெற்ற எம்மானிப் பேருலகிற் சைத்தன்யர்**
**பேர்முழங்கச் செய்தார் பெரிதாக– சீர்மிகும்**
**சீடர்கட் பல்லோரும் சேர்ந்தெங்கும் பாடினர்**
**பாடவந் தேன்யான் புகழ்ந்து. (45)**

நற்பேர் பெற்ற எம்தந்தையாகிய பிரபுபாதர் அவர்கள், இந்தப் பெரிய உலகத்தில் சைதன்யரின் பெயரை நாடு நகரங்களில் பெரிதும் முழங்கச் செய்தார். சீர்மிகுந்த சீடர்கள் பலரும் எங்கும் சேர்ந்து பாடினர், பாடிக் கொண்டிருக்கின்றனர். இதைப் புகழ்ந்து பாடவே யான் வந்தேன்.

**புகழ்வேன் பிரபுபாதர் பொன்னடிகட் போற்றி**
**நகரம்நா டெல்லாம் நலம்செய்– பகவானின்**
**நாமங்கள் நாட்டிட நாற்திசையும் நேர்ந்தஅவர்**
**காமங்கட் கண்ணன் கடன். (46)**

பிரபுபாதர் அவர்களின் பொன்னடிகளைப் போற்றுவேன். உலகின் நாடு நகரங்களில் உள்ளவர்கள் எல்லோருக்கும் நன்மை செய்ய, பகவானின் நாமங்களை நான்கு திசைகளிலும் சென்று அவர்களின் உள்ளங்களிலே நட்டார். அவருடைய விருப்பங்கள் எல்லாம் கண்ணனுக்குப் பணிசெய்து கிடப்பதே.



ஸ்ரீமத் பாகவதத்திற்கான தனது பக்திவேதாந்த பொருளுரைகளை ஸ்ரீல பிரபுபாதர் பதிவு செய்யும் காட்சி


**கடன்நீண்டு செல்லக் குழுவொன் றமைத்தார்**
**திடம்கொண்ட மேலாண்மை தங்க– இடமறிந்து**
**தாய்நாட்டில் மூன்று தனிக்கோயில் முன்னமைய**
**ஆய்ந்தலைந்து பெற்றார் இடம். (47)**

கண்ணனின் பணி தொடர்ந்து செல்ல வேண்டும் என்பதற்காக, தான் நிறுவிய இயக்கத்தை நன்கு நிர்வகிக்க உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்தார். தன்னுடைய தாய்நாடாகிய பாரத நாட்டில் முக்கியமான மூன்று ஊர்களில் கோயில்கள் அமைக்க ஆராய்ந்து, அலைந்து இடம் வாங்கினார்.

**இடம்பெற்றார் மும்பையில் ஈடில் வனத்தில்**
**மடம்பெருகும் மாமாயாப் பூரில்– இடம்மூன்றுள்**
**மும்பை அலுவலகம் மூர்த்திதொழ மாயாப்பூர்**
**தம்மில் விருந்தா வனம். (48)**

மும்பை, ஒப்பற்ற விருந்தாவனம், மடங்கள் பெருகும் மாயாப்பூர் ஆகிய மூன்று ஊர்களில் இடம் வாங்கினார். இவற்றுள் பிரபுபாதருக்கு மும்பை அலுவலகம், அர்ச்சா வழிபாட்டிற்கு மாயாப்பூர், இல்லம் விருந்தாவனம். (தொடரும்)

தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.




**தனது வாழ்வின் இறுதி காலத்தில், யாராவது என்னை (கிருஷ்ணனை) மட்டும் எண்ணிக் கொண்டு உடலை விட்டால், உடனடியாக அவன் என்னுடைய இயற்கையை அடைகிறான். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை.**

**—பகவத் கீதையில் (8.5) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**




**ஒருவன் தனது உடலை விடும்போது எந்த நிலையை எண்ணுகின்றானோ, ஐயமின்றி அந்நிலையை அவன் அடைகிறான்.**

**—பகவத் கீதையில் (8.6) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**




## கருத்து

**யாரொருவர் உண்மையான ஆன்மீக குருவின் உபதேசங்களை ஏற்று, அவற்றை நம்பிக்கையுடன் பின்பற்றி, முழுமுதற் கடவுளின் மீதான அசையாத பக்தித் தொண்டில் ஈடுபடுகிறார்களோ, அவர்கள் இறுதி நன்மையை அடைவது நிச்சயம்.**

**ஆலோசகர் (ஆன்மீக குரு) வயோதிகத்தில் இருக்கிறார் என்றும் சாதாரண மனிதரைக்காட்டிலும் அவருக்கு அதிகமாக எதுவும் தெரியாது என்றும் நினைப்பவர்கள், தங்களது மோசமான சகவாசத்தினால், ஒவ்வொன்றிலும் அழிவைச் சந்திப்பது உறுதி.**

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் சிறப்பாக வெளிவர நன்கொடை வழங்கிய,

**திருமதி.பிரபாகரன் (சுவிட்சர்லாந்து)**

அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

## கிருஷ்ணரின் திருநாமங்களை உச்சரிப்போம், வாரீர்!

மாயனை மன்னுவட மதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்

மாயனை, வட மதுரையின் வலியோனை, தூய யமுனை ஆற்றுக்கு உரியவனை, இடையர் குலத்திலே பிறந்த மங்களச் சுடர் போன்றவனை, தாயின் வயிற்றிற்குப் புகழ் தேடித் தந்தவனை, தாமோதரனை, நாம் அகமும் புறமும் தூய்மையாக வந்து வணங்கி, தூய மலர்களைத் தூவி, வாயினால் பாடி, மனதால் அவனைச் சிந்திப்போமானால், இதுவரையில் செய்த பாவங்களும், அறியாமையால் சேர்ந்த பாவங்களும் நெருப்பிலிட்ட பஞ்சுபோல் மாய்ந்துபோகும். ஆகையால் அவனுடைய திருநாமங்களை நாம் சொல்வோமாக.

(ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை 5)

## எப்போதும் மதிப்புவாய்ந்த எளிய வார்த்தைகள்

அறிவற்ற வார்த்தைகளால் என்ன பலன்? ஒருவரின் வார்த்தைகள் எளிமையாக இருக்கலாம்; ஆனால் அது காலத்திற்கும் மதிப்புள்ளதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நீங்கள் எத்தனையோ செய்தித்தாள்களை அச்சிடு கின்றீர்கள். அதுவும் குறிப்பாக ஞாயிறன்று வெளிவரும் செய்தித்தாள், சுமப்பதற்கே கடினமாக உள்ளது. ஆனால் அதனை ஒரு மணி நேரம் படித்துவிட்டு, மக்கள் எறிந்துவிடுகின்றனர். மாறாக, இங்கிருக்கும் பகவத் கீதையைப் பாருங்கள், மக்கள் இதனைத் தங்களது வாழ்நாள் முழுவதும் வைத்துப் படிக்கின்றனர், 5000 வருடங்களாக பகவத் கீதை இப்படித்தான் படிக்கப்பட்டு வருகின்றது. எப்போதும் பலனளிக்கக்கூடிய இலக்கியங்களை மக்களுக்குக் கொடுங்கள்.


—நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையாளருடன் நடந்த சந்திப்பில் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் (செப்டம்பர் 2, 1972, நியூ விருந்தாவன், அமெரிக்கா)

**டிசம்பர் 17, பகவத் கீதை உபதேசிக்கப்பட்ட திருநாள்**




# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ்ப் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**



### நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரியுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும். ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. சந்தா தொகை: ஒரு வருடம் ரூ. 160; இரண்டு வருடம் ரூ. 300; ஐந்து வருடம் ரூ. 700.

அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ கிருஷ்ண தரிசனம், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!

# மரணத்திலிருந்து விடுபடுதல்

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் அவருடைய சில சீடர்களுக்கும் இடையே நடைபெற்ற பின்வரும் உரையாடல் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் ஜூலை 18, 1975 அன்று காலை உலாவின் போது பதிவு செய்யப்பட்டதாகும்.

**சீடர் (1):** ஸ்ரீல பிரபுபாதரே, இங்கு (ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில்) ஒரு மாணவன் தற்கொலை செய்து கொண்டான். இம்மாதிரியான விஷயங்கள் அமெரிக்கா முழுவதுமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** சிலர் இவ்வாறு பகிரங்கமான முறையில் தற்கொலை செய்து கொள்கின்றனர்; ஆனால், பலர் ஓசையின்றி தற்கொலை செய்து கொள்கின்றனர். மனித வாழ்க்கையானது புலன் நுகர்ச்சியிலேயே வீணடிக்கப்பட்டால், அதுவும் தற்கொலையே. மக்களுக்கு ஆன்மீக ஒளியினை அதாவது ஆன்மீக ஞானத்தைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது; இருப்பினும், நாயைப் போலவும் பூனையைப் போலவும் அவர்கள் வாழ்கின்றனர்.

**சீடர் (2):** நூலகத்திலிருந்த புத்தகங்களை அலசி ஆராய்ந்து, எவ்வாறு அணுகுண்டு தயாரிப்பது என்பதை ஒரு மாணவன் முற்றிலுமாக அறிந்து கொண்டான் என்பது பற்றி ஒரு மாதத்திற்கு முன்பு தினசரி பத்திரிகைகளில் பெரிய கட்டுரைகள் வெளிவந்தன. அணுகுண்டைத் தயாரிப்பதற்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் பொது நூலகத்திலிருந்தே சேகரிக்க முடியும் என்று அதில் கூறப்பட்டிருந்தது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இதுவும் தற்கொலைதான். அணுகுண்டைத் தயாரிப்பதன் மூலம் தனது வாழ்க்கை வெற்றியடைந்துவிட்டதாக அவர் நினைக்கின்றார்; ஆனால் மரணத்திலிருந்து தன்னை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வது என்பது அவருக்குத் தெரியாது. அவர் செய்த சாதனைகள் எதுவும் அவரை மரணத்திலிருந்து காப்பாற்றாது. எனவே விஞ்ஞானத்தைப் பற்றிய அவரது அறிவினால் என்ன பயன் உள்ளது? (ஒரு நாயைச் சட்டிக் காட்டி) இதுவும் இறக்கப் போகிறது; அவரும் இறக்கத்தான் போகின்றார். எனவே, என்ன வித்தியாசம் உள்ளது?



**சீடர் (1):** விஞ்ஞானிகள் அணுகுண்டைத் தயாரித்த தற்கான மூல காரணம், அப்போதைய இரண்டாவது உலகப் போரை விரைவில் முடிவுக்கு கொண்டு வந்து இறப்பைத் தடுக்க வேண்டும் என்பதுதான்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** எவ்வாறு அவர்களால் இறப்பைத் தடுத்து நிறுத்த முடியும்? இறப்பைத் தடுப்பது எப்படி என்று அவர்களுக்கு தெரியாது. இறப்பை அவர்கள் துரிதப்படுத்தலாம். பிறப்பு, இறப்பு, முதுமை, வியாதி ஆகிய நான்குமே வாழ்வின் உண்மையான

பிரச்சனைகள். இப்பிரச்சனைகளை எந்த விஞ்ஞானியால் தீர்க்க முடியும்? இவையே உண்மையில் அச்சமூட்டும் பிரச்சனைகள், ஆனால் இவற்றிற்குத் தீர்வு காணக்கூடிய இரசாயண, மனோதத்துவ விஞ்ஞானிகள் எங்கு இருக்கின்றனர்?

**சீடர் (1):** தற்போதைய காலக்கட்டத்தில் விஞ்ஞானிகளின் கோட்பாடு என்னவெனில், ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் நிறைய அணு ஆயுதங்கள் இருப்பதால் அவர்கள் இருவரும் அவற்றைப் பயன்படுத்தப் பயப்படுகிறார்கள் என்பதே!

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. அவர்கள் அவற்றை பயன்படுத்தியே தீருவர். அதுவே இயற்கையின் ஏற்பாடு, இது ஜோதிடம் அல்ல, இயல்பான முடிவு, இதில் எந்த சந்தேகமும் இல்லை.

**சீடர் (1):** அவர்கள் இந்த அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால், அங்குப் பேரழிவு உண்டாகும்—இது மட்டுமே அவர்களின் சங்கடம். எனவே, ஒவ்வொருவரும் அவற்றைப் பயன்படுத்த அஞ்சுகின்றனர்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நல்லது. முழு நாசமோ, பகுதி நாசமோ, அதை நாம் பொறுத்திருந்து பார்க்கலாம். ஆனால் அந்த ஆயுதங்கள் நிச்சயம் பயன்படுத்தப்படும். சண்டையைத் தவிர்ப்பதற்குத் தலைவர்கள் விரும்பினால், அவர்கள் மூன்று விஷயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்: (1) கடவுளே எல்லாவற்றின் உரிமையாளர்; (2) எல்லாவற்றின் அனுபவிப்பாளரும் அவரே; மேலும் (3) அவரே ஒவ்வொருவருக்கும் உற்ற நண்பன். ஆனால், தலைவர்களோ இதற்கு மாறாக, "நானே உரிமையாளன், நானே அனுபவிப்பாளன், நானே எல்லோரின் நண்பன், ஏனெனில் நானே கடவுள்" என்று எண்ணிக் கொண்டு செயல்படுகின்றனர். இஃது அசுரத்தனமானது. எல்லோருக்கும் நண்பன் என்று பாசாங்கு செய்து, நிக்ஸன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; ஆனால் பிறகு அவர் தன்னை எதிரி என்று நிரூபித்துவிட்டார். கிருஷ்ணரைத் தவிர வேறு எவரும், எல்லோரின் உற்ற நண்பனாக இருக்க முடியாது.

**சீடர் (3):** ஆனால் பகவானின் தூய பக்தன் எல்லோரின் நண்பன் தானே?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். ஏனெனில், அவர் கிருஷ்ணரின் போதனைகளை எங்கும் எடுத்துச் செல்கின்றார். உலகளாவிய நண்பனைப் பற்றிய செய்தியை யாராவது தெரிவித்தால், அவ்வாறு தெரிவிப்பவரும் உலகளாவிய நண்பனாக மாறுகின்றார். கிருஷ்ணரே எல்லோரின் உற்ற நண்பன், *ஸுஹ்ருதம் ஸர்வ-பூதானாம்* (பகவத் கீதை 5.29). தூய பக்தன், கிருஷ்ணரே உற்ற நண்பன் என்று ஒவ்வொருவரிடமும் கூறுகின்றார். எனவே, கிருஷ்ணரின் பிரதிநிதியைத் தவிர, வேறு எவரும் உங்களின் உண்மையான நண்பனாக முடியாது. நம் இருவரின் அன்பிற்கும் கிருஷ்ணர் பாத்திரமான நண்பர் என்பதை நாம் உணரும் போது, நான் உங்களுடைய நண்பனாகவும், நீங்கள் என்னுடைய நண்பனாகவும் இருக்க முடியும்.

**சீடர் (3):** ஸ்ரீல பிரபுபாதரே, நாங்கள் உங்களுடைய புத்தகங்களை விநியோகம் செய்யும் போது, நாங்களும் மக்களின் நண்பர்கள் என்று தெரியப்படுத்தலாமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஓ! நிச்சயமாக. அதுவே உண்மையான நட்பு. சைதன்ய மஹாபிரபு கூறுவதுபோல,

*கோட நித்ர ஜாவோ மாயா-பிஷாசீர கோலே,*
*ஹரி-நாம மஹா-மந்த்ர லாவோ துமி மாகி*

"மக்களே, மாயையின் வசியத்தில் நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றீர்கள்; எவ்வளவு காலம் உறக்கத்திலேயே இருப்பீர்கள், எவ்வளவு காலம் இந்த ஜடவுலகில் துன்பப்படுவீர்கள்? என்னிடம் ஹரே கிருஷ்ண மஹா மந்திரம் என்னும் மருந்து உள்ளது. அதை எடுத்துக் கொண்டு இனிமேலும் உறக்கத்தில் இருக்காதீர்கள்."

**சீடர் (1):** அணுஆயுதப் போரைப் பற்றிய பயம் கிருஷ்ண பக்தி பரவுவதற்கு உதவுமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. பயம் என்பது எப்போதுமே உள்ளது; ஆனால் மக்கள் அதைக் கண்டுகொள்ளாமல் முட்டாள்தனமாக உள்ளனர். ஏற்கனவே, மரணத்தைப் பற்றிய பயம் நிச்சயமாக உள்ளது; ஒவ்வொருவருக்கும் மரணம் நிச்சயம்; ஆனால் அதைப் பற்றி யார் யோசிக்கிறார்கள்? மரணம் என்னும் பிரச்சனையை மக்கள் தவிர்க்க முயல்கின்றனர்; ஏனெனில், அவர்களால் இதற்கு மாற்று உபாயத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

**சீடர் (4):** ஸ்ரீல பிரபுபாதரே, நாம் இறக்கப் போகின்றோம், அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பதைப் பற்றி நாங்கள் தொடர்ந்து உங்களிடமிருந்து கேட்டு வருகின்றோம், உங்கள் புத்தகங்கள் வாயிலாகவும் இதைப் பற்றி படிக்கின்றோம். இருப்பினும்,



கிருஷ்ணரே உரிமையாளர், கிருஷ்ணரை அனுபவிப்பாளர், கிருஷ்ணரே உற்ற நண்பன் என்பதை உணரும்போது மரண பயத்திலிருந்து விடுபட முடியும்.

உங்கள் சீடர்கள் என்ற முறையில், எங்களுக்குக்கூட இதில் பூரண நம்பிக்கை வரவில்லை. மரணத்தை மறைத்து வைக்கும் கலாச்சாரத்தில் நாங்கள் வளர்க்கப்பட்டுள்ளோம். முக்கியமாக இங்கு அமெரிக்காவில் மரணமடைந்தவர்களைக் காண்பது என்பது மிகவும் அபூர்வம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் மரணமடைய மாட்டீர்கள் என்று நம்புகிறீர்களா?

**சீடர் (4):** நான் மரணமடையப் போகிறேன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை உணரும் தளத்திற்கு நம்மால் எப்படி வர இயலும்?


**ஸ்ரீல பிரபுபாதர்:** ஒவ்வொருவரும் மரணமடைகின்றனர். உங்களுடைய தாயார் மடிந்தார், உங்களுடைய தந்தை மடிந்தார்; இருப்பினும் உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், உங்களுக்கு எவ்வாறு புரிய வைக்க முடியும்? ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும், பற்பல மனிதர்களும் மிருகங்களும் மரணமடைகின்றனர், மரணம் என்பது தடுக்கப்பட முடியாதது. இருப்பினும், "நான் மரணமடைய மாட்டேன்," என்று நீங்கள் நினைத்துக் கொண்டுள்ளீர்கள். இதுவே நம்மடைய உண்மையான பிரச்சனை; யாரும் இறக்க விரும்புவது இல்லை, ஆனால் ஒவ்வொருவரும் இறக்கின்றனர். இப்பிரச்சனையை இந்த முட்டாள் விஞ்ஞானிகளால் தீர்க்க முடியாது.

இந்த பசுபிக் கடலில் சில சமயங்களில் நாய் நீந்திச் செல்வதைக் காணலாம். "இந்த நாயின் வாலைப் பிடித்துக் கொண்டு, இக்கடலைக் கடந்துவிடலாம்," என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது சாத்தியமல்ல. அதுபோலவே, பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகிய பிரச்சனைகளை விஞ்ஞானிகள், தத்துவவாதிகள் என்னும் போர்வையில் இருப்பவர்கள் தீர்த்து வைப்பார்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள், நாயின் வாலைப் பிடித்துக் கொண்டு பசுபிக் மஹா சமுத்திரத்தைக் கடக்க முயல்பவர்களைப் போன்றவர்களே! விஞ்ஞானிகளின் வாலைப் பிடித்துக் கொள்வது எவ்விதத்திலும் பயனளிக்காது.

**சீடர் (1):** எனவே, இறப்பின் உண்மை நிலையை தத்துவத்தின் மூலம் புரிந்து கொண்டு உயர்வு பெற வேண்டுமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** தற்போதைய நிலையில், தத்துவம் என்றாலே 'மனக் கற்பனை' என்ற நிலை உள்ளது. "நான் இப்படி நினைக்கின்றேன், அவர் அப்படி நினைக்கிறார்," என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு தத்துவத்தைப் பேசுகின்றனர். எனவே, இத்தகு தத்துவங்கள் அனைத்தும் மனக் கற்பனையே. கிருஷ்ணர் பகவத் கீதையில் கூறுவதே உண்மையான தத்துவம். ஜன்ம-ம்ருத்யு-ஜரா-வ்யாதி-து:க-தோஷானுதர்ஷனம். (பகவத் கீதை 13.9) இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கு மரணம் உண்டு, வயோதிகம் உண்டு; நோயும் உண்டு. கிருஷ்ண உணர்வுள்ளவர்களாக மாறுவதன் மூலம் உங்களை நீங்கள் இவற்றிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். இதுவே தத்துவம்.

---



# வைகுண்டம், இதோ இங்கே

கலாச்சாரமும் கவனமும் இல்லாததால், மொத்த உலகமும் சிக்கலான சூழ்நிலையில் உள்ளது. ஆனால் நாம் வேத கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்டால், மொத்த உலகமுமே வைகுண்டமாக மாறிவிடும். வேத கலாச்சாரத்தின் சாரம் அனைத்தும் பகவத் கீதையில் உள்ளது. நீங்கள் வைகுண்டத்திற்குப் போக வேண்டிய அவசியமில்லை; இங்கேயே நீங்கள் வைகுண்டத்தில் தான் இருப்பீர்கள். மறுபிறவியில் நீங்கள் வைகுண்டத்தை அடைவீர்கள். கிருஷ்ணர் வேத கலாச்சாரத்தை நமக்கு வழங்குகிறார். இதனை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொண்டால், நீங்கள் வைகுண்டம் செல்வதற்குத் தகுதியுடையவராக ஆவீர்கள். அற்புதமான இந்த வேதக் கலாச்சாரம் எளிமையான வார்த்தைகளால் முழுமுதற் கடவுளாலேயே சாரமாக வழங்கப்பட்டுள்ளது. நாம் இதனை (பகவத் கீதையை) ஏற்றுக் கொண்டால், உலகின் பார்வை மாறிவிடும்.

—ஸ்ரீமத் பாகவத (6.1.21) உரையில்
தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்
(மே 21, 1976, ஹோனோலுலு, அமெரிக்கா)

**டிசம்பர் 17, பகவத் கீதை உபதேசிக்கப்பட்ட திருநாள்**

# கடவுள் இருக்கின்றாரா?

கடவுள் இருக்கின்றாரா, இல்லையா என்னும் கேள்வி பலரின் மனதில் அவ்வப்போது எழக்கூடிய ஒன்றாகும். கடவுள் இருக்கின்றார் என்று கூறும் ஆத்திகர்களுக்கும், கடவுள் இல்லை என்று கூறும் நாத்திகர்களுக்கும் இடையில் உலகெங்கிலும் அவ்வப்போது வாதங்கள் நடைபெறுகின்றன. அவ்வாதங்களின் இறுதியில், கடவுள் இருக்கின்றார் என்பதே பெரும்பாலும் முடிவு செய்யப்படுகின்றது. எண்ணிலடங்காத அத்தகு வாதங்களின் ஒரு சிறு பகுதி, ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் வாசகர்களுக்காக இங்கு வழங்கப்பட்டுள்ளது.

வழங்கியவர்: ஜெய கோபிநாத தாஸ்


கடவுள் இல்லை என்பதைக் காட்டிலும் கடவுள் இருக்கின்றார் என்பதற்கே சாட்சிகள் அதிகமாக உள்ளன. அதை நிரூபிப்பதற்கான சில தகவல்கள்:

* இவ்வுலகில் எல்லா தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தேவைக்கு அப்பாற்பட்டு எதுவும் இல்லை, தேவைப்பட்டு இல்லாமல் இருப்பதும் ஏதுவும் இல்லை. உதாரணமாக, தாகத்தைத் தணிப்பதற்குத் தண்ணீர் இருக்கின்றது, பலதரப்பட்ட உயிரினங்களின் பசியைத் தணிப்பதற்குப் பலதரப்பட்ட உணவு வகைகள் உள்ளன. இவற்றைக் கூர்ந்து கவனித்தால், இவற்றையெல்லாம் முறையாக நிர்வகிப்பவர் ஒருவர் இருப்பதை நிச்சயம் உணரலாம்.

* ஓர் அழகான ஓவியத்தை பார்த்தால் (உம். மோனாலிஷா ஓவியம்), அந்த ஓவியத்தை வரைந்த ஓவியரை நாம் பாராட்டுவோம். ஆனால் பலதரப்பட்ட வர்ணங்களில் இருக்கும் வண்ணத்துப் பூச்சி, பச்சை வர்ணக் கிளி போன்றவற்றிற்கு வர்ணம் தீட்டிய ஓவியர் யார்?

* விண்வெளியில் செலுத்தப்பட்ட ஒரு செயற்கைக் கோளைப் பராமரிக்க, பெரிய விஞ்ஞானிகள் குழு இரவு பகலாக உழைக்கின்றது. ஒவ்வொரு செயற்கைக் கோளுக்கும் ஒரு பெரிய கட்டுப்பாட்டு அறை உள்ளது. ஆனால், இயற்கையின் விண்வெளியில் எத்தனையோ கோள்களும் நட்சத்திரங்களும் உள்ளன. அவற்றை வடிவமைத்த விஞ்ஞானி யார், கட்டுப்படுத்துபவர் யார்? இந்த பிரம்மாண்ட சக்திக்குப் பின்னால் இருப்பவர் யார்?

* ஒரு கைக்கடிகாரத்தைப் பார்த்தால், அதனைத் தயாரித்தது யார் என்பதை நாம் கவனிக்கின்றோம். ஏனெனில், நுணுக்கமான அக்கைக்கடிகாரத்தின் தொழில்நுட்பத்திற்கு உரிமையாளர் என்று ஒருவர் இருத்தல் அவசியம். அப்படியிருக்க, மிகவும் நுணுக்கமான தொழில்நுட்பத்தை உடையதும், உலகிலுள்ள எல்லா நூலகங்களின் எல்லா



மோனாலிஷா ஓவியத்தை வரைந்தவர் இருக்க இயற்கையை வரைந்தவர் யார்? செயற்கைக் கோள்களை கட்டுப்படுத்துபவர்கள் இருக்க விண்வெளியை கட்டுப்படுத்துபவர் யார்? கைக்கடிகாரத்தைத் தயாரித்தவர் இருக்க மூளையைத் தயாரித்தவர் யார்?

தகவல்களையும் சேகரிக்கும் திறன் படைத்த, சக்திவாய்ந்த, மனித மூளையின் உரிமையாளர் யார்?

* நாம் நடக்கும்பொழுதும், விளை யாடும் பொழுதும், உணவு உண்ணும் பொழுதும், நமது உறுப்புகள் முழுமை யான ஒருங்கிணைப்புடன் செயல்படு கின்றன. அந்த ஒருங்கிணைப்பில் சிறிதளவு குறைந்தாலும் நம்மால் முறை யாகச் செயல்பட முடியாது. முறையான இச்செயல்களுக்குப் பின்னால் இருக்கும் ஒருங்கிணைப்பாளர் யார்?

படைக்கப்பட்ட ஒன்றைப் பார்க்கும்போது அதற்கென்று படைப்பாளி இருப்பதை நாம் உணரலாம். இவ்வுலகில் எதுவும் தற்செயலாக நடப்பதில்லை. உயர்ந்த நிர்வாகம், பிரம்மாண்ட சக்தி, முழுமையான ஒருங்கிணைப்பு இவையனைத்தும் கடவுளின் இருப்பை நிச்சயம் உணர்த்தக்கூடியவை. எனவே, எல்லாவற்றின் மூல காரணமாக, பரம ஆளுநராக, பரம உரிமையாளராக, பரம அனுபவிப்பாளராக ஒருவர் இருத்தல் அவசியம்—அவரே கடவுள் எனப்படுகிறார். அக்கடவுளைப் பற்றி நாம் அறிந்து கொள்வது எப்படி? அடுத்த இதழில் காண்போம்.

ஜெய கோபிநாத தாஸ் B.E அவர்கள், இஸ்கான் சென்னை கிளையில் முழு நேர பிரம்மச்சாரியாக தொண்டாற்றி வருகிறார்.

# கடவுள் இருக்கின்றார் என்றால், ஏன் பல்வேறு துன்பங்கள்?

*(இணையத்தின் மூலம் பெறப்பட்ட சிந்திக்கத் தூண்டும் கதை)*

தலைமுடியை வெட்டி தாடியைச் சீர்படுத்த ஒருவன் முடிதிருத்தகத்திற்குச் சென்றான். சவரத் தொழிலாளி தனது பணியை செய்யத் தொடங்கியவுடன் அவர்கள் இருவரும் பேசத் தொடங்கினர். பல்வேறு விஷயங்களைப் பேசி வந்த அவர்கள் கடவுளைப் பற்றியும் பேசத் தொடங்கினர். ‘‘எனக்குக் கடவுளின் மீது நம்பிக்கைக் கிடையாது,’’ என்று சவரத் தொழிலாளி கூறினான்.

‘‘ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள்?’’ என வாடிக்கையாளர் வினவ, ‘‘நீங்கள் தெருவில் நடந்து சென்றால் போதும், கடவுள் இல்லை என்பதை புரிந்து கொள்வீர்கள். கடவுள் இருப்பதாக இருந்தால், ஏன் இத்தனை மக்கள் வியாதியுடன் வாழ்ந்து வருகின்றனர்? ஏன் அனாதைக் குழந்தைகள் இருக்கின்றனர்? கடவுள் இருக்கின்றார் என்றால், வலியோ துன்பமோ இருக்கக் கூடாது. அன்புமிக்க கடவுள் இதையெல்லாம் அனுமதிக்கின்றார் என்பதை என்னால் கற்பனை கூட செய்ய முடியவில்லை,’’ என்று பதில் கிடைத்தது.

ஒரு நிமிடம் யோசித்த வாடிக்கை யாளர், வீண் வாதம் செய்ய வேண்டாம் என்று நினைத்து அமைதி காத்தார். சவரத் தொழிலாளி தனது பணியினை நிறைவேற்ற, வாடிக்கையாளரும் கடையைவிட்டு அகன்றார். அவர் கடைக்கு வெளியில் வந்த மாத்திரத்தில், நீண்ட அழுக்கான முடியுடனும் தாடியுடனும் ஒரு மனிதனைக் கண்டார். மீண்டும் கடையினுள் நுழைந்த வாடிக்கையாளர், சவரத் தொழிலாளியிடம், ‘‘உங்களுக்கு ஒன்று தெரியுமா? சவரத் தொழிலாளிகள் கிடையவே கிடையாது,’’ என்றார்.

ஆச்சரியமுற்ற சவரத் தொழிலாளி, ‘‘எப்படி உங்களால் அவ்வாறு சொல்ல முடியும்? நான் ஒரு சவரத் தொழிலாளி, நான் இங்குதான் உள்ளேன். தற்போதுதான் தங்களுக்குச் சவரம் செய்தேன்.’’ ‘‘இல்லை, சவரத் தொழிலாளிகள் உலகில் இல்லை. அவ்வாறு இருப்பார்களேயானால்,



வெளியில் உள்ள இந்த மனிதனைப் போன்று நீண்ட அழுக்கான முடியுடனும் தாடியுடனும் யாரும் இருக்க மாட்டார்கள்,’’ என்று வாடிக்கையாளர் பதிலளித்தார்.

‘‘ஓ, சவரத் தொழிலாளிகள் இருக்கத் தான் செய்கிறார்கள்; பிரச்சனை என்ன வெனில், இத்தகு மக்கள் அவர்களை அணுகுவதில்லை.’’

அவரது கூற்றினை ஆமோதித்த வாடிக்கையாளர், ‘‘ஆம். இதுவே கருத்து. கடவுள் இருப்பதும் உண்மையே. பிரச்சனை என்னவெனில், மக்கள் அவரைக் கண்டு கொள்வதில்லை. அதனால் மட்டுமே இவ்வுலகில் வலியும் துன்பமும் அனுபவிக்கப்படுகின்றன,’’ என்று பதிலளித்தார்.

**தொகுப்பாசிரியர் குறிப்பு:** இந்த உலகத்தின் இயற்கை துன்பமயமானது என்று பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உரைக்கின்றார். துன்பங்கள் நிறைந்த இவ்வுலகினை விடுத்து, ஆனந்தமயமான தன்னுடைய லோகத்திற்கு வருமாறு அவர் நம் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றார். அதனை ஏற்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தாமரைத் திருவடிகளில் முழுமையாக சரணடைவது நம்முடைய பணியாகும்.


# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



பரம்பொருளான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர் முற்றிலும் ஆன்மீகமயமானவர்; எனவே, அவரது திருநாமம், ரூபம், குணம், லீலை என அனைத்துமே அவரைப் போன்றவை. அந்த இறைவனின் எண்ணிலடங்காத திருநாமங்களை உச்சரிப்பதால், யார் வேண்டுமானாலும் அவருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும். முற்றிலும் ஆன்மீகமயமான அந்த இறைவனுடனான இடையறாத சங்கத்தினால் ஒருவர் படிப்படியாக பூரண ஆன்மீக நிலையை உணர முடியும். குறைந்த ஆயுளும், ஆன்மீக விஷயங்களில் மந்த புத்தியும், தவறான தலைமையும், துரதிர்ஷ்டமும், எப்போதும் பௌதிகத் துன்பமும் நிறைந்த இந்த கலி யுகத்தில் வசிக்கும் நபர்களுக்கு, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரம் மிகவும் பொருத்தமான வழிமுறையாகும். இறைவனின் இத்திருநாமங்களை உச்சரிப்பதன் மூலமாக எல்லா தரப்பட்ட பிரச்சனைகளிலிருந்தும் ஒருவர் விடுபட முடியும்.

உலகிலுள்ள எல்லோருக்கும் பொதுவான இந்த வழிமுறையை அனைவருக்கும் எடுத்துரைப்பதற்காக, தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் இந்த அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான்) ஏற்படுத்தப்பட்டது. சர்வசக்தி கொண்ட இறைவனின் திருநாமத்தை உச்சரிப்பதற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் கிடையாது. எல்லா நேரத்திலும், எல்லா இடங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் இந்த நாமத்தை உச்சரிப்பவர்கள், இறையன்பை வளர்ப்பதற்கான பாதையில் விரைவாக முன்னேற்றம் அடைவர்.




ஆன்மீக ஞானத்தின் மணிமகுடமாக விளங்கும் பகவத் கீதை, தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்" என்னும் பெயரில், 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகின் வேறு எந்த பகவத் கீதை பதிப்பிற்கும் இல்லாத அளவில் உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. எளிமையான விதத்தில் ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்த கண்ணோட்டம்.

பத்தொன்பது இதழ்களில் வெளிவர உள்ள இந்த நீண்ட தொடரின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக நீங்கள் படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய 37 பக்கங்களைக் கொண்ட அறிமுகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்த **அறிமுகம்** இந்த இதழிலும், பகவத் கீதையின் 18 அத்தியாயங்கள் இனிவரும் இதழ்களிலும் காணக் கிடைக்கும்.

## பகவத் கீதையை ஏற்றுக்கொள்ள வேண்டிய விதம்

ஆன்மீகப் புத்தகங்களை எழுதுவதற்கு முன்பாக அதன் ஆசிரியர், தனது ஆன்மீக குரு, பூர்வீக ஆச்சாரியர்கள், மற்றும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை வணங்கி மங்களாசரணம் செய்வது வேதப் பண்பாடு. அதன்படியான மங்களாசரணத்துடன் பகவத் கீதையின் அறிமுகத்தை எடுத்துரைக்கும் ஸ்ரீல பிரபுபாதர், எத்தனையோ பகவத் கீதை ஏற்கனவே உள்ள சூழ்நிலையில், அவற்றின் ஒவ்வொரு கருத்துரையாளரும் தனது சொந்த அபிப்பிராயத்தையே பெரும்பாலும் வெளிப்படுத்தியிருப்பதால், பகவத் கீதை உண்மையுருவில் என்னும் இப்பதிப்பிற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாக விளக்குகிறார்.

ஒரு மருந்தை நாம் உட்கொள்ள விரும்பினால், அதன் தலைப்புக் காகிதத்தில் கூறப்பட்டுள்ளபடியோ, ஒரு மருத்துவரின் அறிவுரைப்படியோ அதனை உட்கொள்ள வேண்டும். அதுபோலவே பகவத் கீதையை பகவான் ஸ்ரீ

கிருஷ்ணர் கூறியபடியே ஏற்றுக்கொள்ள வேண்டும். கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பது கீதையின் ஒவ்வொரு பக்கத்திலும் கூறப்பட்டு, அது பல்வேறு மிகச்சிறந்த ஆச்சாரியர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பகவத் கீதை, குரு சீடப் பரம்பரையின் மூலமாக உணரப்பட்டு வந்ததாக கிருஷ்ணர் (4.1—3) கூறுவதால், நாமும் கீதையைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், குரு சீடப் பரம்பரையில் வருபவரை அணுகுதல் அவசியம்.

தனது நண்பனாகவும் பக்தனாகவும் அர்ஜுனன் இருப்பதால், இந்த பரம இரகசியத்தை அவனிடம் உரைப்பதாக பகவான் கூறுகின்றார். ஞானி, யோகி, பக்தன் என்று மூன்று விதமான ஆன்மீகவாதிகள் இருந்தாலும், பகவத் கீதையை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டுமெனில், அவர் அர்ஜுனனைப் போன்று பக்தராக இருத்தல் அவசியம்.

பகவானுடன் ஒருவர் சாந்தமாக, சேவகராக, நண்பராக, பெற்றோராக, அல்லது காதலராக உறவு கொள்ள முடியும். பகவானுடனான அந்த திவ்யமான உறவு முறையினை பக்திமய சேவையில் பக்குவமடையும்போது நம்மால் உணர முடியும். நமது தற்போதைய நிலையில் பகவானை மட்டுமின்றி அவருடனான நமது நித்திய உறவையும் நாம் மறந்துள்ளோம்; பக்தித் தொண்டில் ஈடுபடுவதால் நாம் நம்முடைய சுயநிலைக்குத் திரும்ப முடியும்.

மேலும், அர்ஜுனன் எவ்வாறு பகவத் கீதையை ஏற்றுக் கொண்டானோ (10.12—14), அதே போன்று நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்ட அர்ஜுனன், தனது கூற்றினை உறுதிப்படுத்துவதற்காக, நாரதர், வியாசர், அஸிதர், தேவலர் போன்ற மாமுனிவர்களும் கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்றுள்ளதை மேற்கோள் காட்டுகிறான். கிருஷ்ணர் கூறியவை அனைத்தையும் முற்றிலுமாக அர்ஜுனன் ஏற்றுக் கொண்டான். எனவே, கீதையானது குரு சீடப் பரம்பரையில், பக்தி உணர்வுடன், கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்று, முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.



அர்ஜுனனைப் போன்று ஸ்ரீ கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்று, குரு சீடப் பரம்பரையின் மூலம் பகவத் கீதை அறியப்பட வேண்டும்.

## பகவத் கீதையின் நோக்கம்


மனித குலத்தை வாழ்வின் குழப்பங்களிலிருந்து விடுவிப்பதே பகவத் கீதையின் நோக்கமாகும். குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் மாபெரும் குழப்பத்திற்கு உட்பட்ட அர்ஜுனன், கிருஷ்ணரிடம் சரணடைய, அதன் விளைவாக கீதை பேசப்பட்டது. உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் அதே போன்று குழம்பிய நிலையில்தான் உள்ளான். ஆனால் அவர்களில் வெகுசிலரே, "நான் யார்? எங்கிருந்து வந்தேன்? மரணத்திற்குப் பின் எங்குச் செல்வேன்? வாழ்வின் குறிக்கோள் என்ன?" போன்ற கேள்விகளைக் கேட்கின்றனர். அவ்வாறு கேள்வி கேட்கும் நபர்கள், அக்கேள்விகளுக்கான விடையினை கீதையில் காணலாம்.

பகவத் கீதை என்பது, அர்ஜுனனுக்காக மட்டும் உபதேசிக்கப் பட்டது அல்ல; மாறாக தன்னை அறிவதில் உண்மையான ஆர்வத்துடன் இருக்கும் ஒவ்வொருவருக்காகவும் உபதேசிக்கப்பட்டதாகும். உண்மையில், கிருஷ்ணரின் தூய பக்தனான அர்ஜுனன் குழப்பங்களுக்கு அப்பாற்பட்டவன். குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் அர்ஜுனனுக்கு எழுந்த சந்தேகங்கள் கிருஷ்ணரின் ஏற்பாட்டினால் எழுந்தவையே. அச்சந்தேகங்களுக்கு விடையளிப்பதன் மூலம் மனித வாழ்வின் இலட்சியத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்கு அனைவருக்கும் வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.

## பகவத் கீதையின் ஐந்து விஷயங்கள்

பகவத் கீதையினால் தன்னுணர்வு பெறமுடியும்என்றால், அதில்கூறப்பட்டுள்ள விஷயங்கள் யாவை? என்னும் கேள்வி இயற்கையாக எழலாம். பகவத் கீதை, ஐந்து அடிப்படை உண்மைகளைத் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்குகின்றது: 1) எல்லாவற்றையும் கட்டுப் படுத்தும் இறைவன் (ஈஸ்வரன்), 2) உயிர்வாழிகள் (ஜீவன்), 3) ஜட இயற்கை (பிரக்ருதி), 4) ஜட இயற்கை தோன்றி மறைவதைக் குறிக்கும் காலம் (காலம்), 5) ஜீவன்களின் செயல் (கர்மா).

**ஈஸ்வரன்:** எல்லோரையும் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் இவர், கிருஷ்ணர், பரமாத்மா, அல்லது பிரம்மன் என்று அறியப்படுகிறார். ஜீவன்களும் ஜட



பகவத் கீதையின் ஐந்து விஷயங்கள்:
ஈஸ்வரன், ஜீவன், பிரக்ருதி, காலம், கர்மா

இயற்கையும் இவருக்குக் கீழ்படிந்த சக்திகளே. இவரது ஆணையின் கீழ்தான் ஜட இயற்கை செயல்படுகிறது. இயற்கைக்குப் பின்னால் இறைவன் இருப்பதை அறியாதவர்கள், மோட்டார் வாகனத்திற்குப் பின்னால் ஓட்டுநர் இருப்பதை அறியாத குழந்தையைப் போன்றவர்கள். அந்த இறைவன் முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரே, பரம்பொருளை அருவப் பிரம்மனாக அல்லது பரமாத்மாவாக உணர்வதைக் காட்டிலும் பரம புருஷ பகவானான ஸ்ரீ கிருஷ்ணராக உணர்தலே சிறந்தது. குன்றிய அறிவுடையவர்களே பரம் பொருள் அருவமானது என்று கருது கின்றனர். ஜட இயற்கைக்கு எப்போதும் அப்பாற்பட்டவராகத் திகழும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், இவ்வுலகிற்கு இறங்கிவரும் போது ஒருபோதும் ஜட இயற்கையினால் களங்கமடைவதில்லை.

**ஜீவன்:** ஜீவன்கள் எனப்படும் உயிர் வாழிகள், ஈஸ்வரனின் அம்சங்களாவர். தங்கத்தின் ஒரு துகள் எவ்வாறு தங்கமோ, கடல் நீரின் ஒரு துளி எவ்வாறு உப்புக் கரிக்கின்றதோ, அவ்வாறே ஈஸ்வரனான ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சங்களான ஜீவன்களுக்கும் அந்த முழுமுதற் கடவுளின் குணங்கள் அனைத்தும் சிறிய அளவில் உள்ளன. ஜீவன்களுக்கு உணர்வுகள் இருப்பதால், அவர்கள் பிரக்ருதியைக் காட்டிலும் உயர்ந்தவர்கள். இருப்பினும், அவர்கள் ஒருபோதும் இறைவனுக்கு இணையாக மாட்டார்கள். அவர்கள் என்றுமே (ஜடத்தில் கட்டுண்ட நிலையிலும் சரி, முக்தி பெற்ற நிலையிலும் சரி) இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக உள்ளனர். ஜீவன்கள் ஜடத்துடன் தொடர்பு கொள்ளும்போது, அவர்கள் இந்த ஜடவுலகத்தில் பந்தப்படுகின்றனர். அதிலிருந்து விடுபட்டு தன்னுடைய உண்மையான உணர்விற்குத் திரும்பு வதே முக்தியடைதல் எனப்படும். வயிற்றிற்கு உணவளிப்பதால் உடலின் இதர பாகங்கள் திருப்தியடைவதுபோல, வேருக்குத் தண்ணீர் ஊற்றுவதால் மரத்தின் இதர பாகங்கள் திருப்தியடைவது போல, முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தொண்டாற்றும்போது அவரின் அம்சங்களான ஜீவன்கள் பூரண திருப்தியடைகின்றன.

**பிரக்ருதி:** இது கிருஷ்ணரின் சக்தி என்றபோதிலும், கீழ்நிலை சக்தி, அதாவது ஜீவ சக்தியைக் காட்டிலும் கீழ்நிலையில் இருப்பதாகும். ஸத்வ குணம் (நற்குணம்), ரஜோ குணம் (தீவிர குணம்), தமோ குணம் (அறியாமை குணம்) ஆகிய முக்குணங்களால் அமைந்ததே இந்த ஜட இயற்கை. பிரக்ருதியின் தோற்றம் பொய்யானதாக சில தத்துவவாதிகள் கூறுகின்றனர்; ஆனால் பகவத் கீதையின்படி இதன் தோற்றம் பொய்யானதல்ல, மாறாக தற்காலிகமானதாகும். பிரக்ருதி (இயற்கை) ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் தோன்றி, சில காலம் இருந்து, பின் மறைகின்றது. ஆனால் இந்தச் சுழற்சி நித்தியமாகச் செயல்படுவதால், பிரக்ருதி நித்தியமானதாகும், பொய்யல்ல.

**காலம்:** ஜட இயற்கையானது காலத்தின் அடிப்படையில் செயல்படுகின்றது. இப்பௌதிக தோற்றத்தின் காலம், பரம் பொருளின் சக்தியினால் தீர்மானிக்கப் படுகிறது. அந்தக்காலம்முடிவுபெற்றவுடன், இவ்வுலகின் நிரந்தரமற்ற தோற்றங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும். பின்னர், அதே காலத்தின் ஏற்பாட்டில் இவ்வுலகம் மீண்டும் படைக்கப்படுகிறது.

**கர்மா:** இயற்கை குணங்களின் கலவையினால், நித்தியமான காலத்தின் கட்டுப்பாட்டில் நடைபெறும் செயல்கள், கர்மா எனப்படுகின்றன. இச்செயல்கள் நினைவிற்கெட்டாத காலத்திலிருந்து வருபவை. அவற்றின் அடிப்படையில் நாம் இன்ப துன்பத்தை அனுபவிக்கின்றோம். ஈஸ்வரன், ஜீவன், பிரக்ருதி, காலம், கர்மா ஆகிய ஐந்தில் கர்மாவைத் தவிர இதர நான்கும் நித்தியமானவை. கர்மத்தின் விளைவுகள் மிகவும் பழையதாக இருக்கலாம், ஆனால் அவற்றை நம்மால் மாற்ற இயலும். கர்ம பந்தத்திலிருந்து நிரந்தரமாக விடுபட முடியும், அதற்கான வழிமுறை கீதையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## வேத ஞானத்தைப் புரிந்துகொள்ளுதல்

வேத ஞானத்தை நாம் அப்படியே, உள்ளது உள்ளபடி ஏற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக, மலம் அசுத்த மானது என்று கூறும் வேத சாஸ்திரங்கள், பசுஞ்சாணம் தூய்மையானது என்று கூறுகின்றன. இது முரண்பட்டதாகத் தோன்றினாலும் உண்மையில் இதில் முரண்பாடுகள் கிடையாது. பசுஞ்சாணம் மிகச்சிறந்த கிருமிநாசினி என்பது நவீன விஞ்ஞானமும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். எனவே, எல்லாத் தவறுகளுக்கும் முரண்பாடுகளுக்கும் அப்பாற்பட்ட வேத ஞானம் முழுமை யானதாகும். பகவத் கீதை அத்தகைய எல்லா வேத ஞானத்திற்கும் சாரமாக விளங்குகிறது.

வேத ஞானத்தை ஆராய்ச்சியின் மூலம் தெரிந்து கொள்வது என்னும் கேள்விக்கே இடமில்லை. மிகவுயர்ந்த குருவாகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரி லிருந்து வரும் பரம்பரையின் மூலமாக, அர்ஜுனனைப் போன்று எந்த எதிர்ப்புகளும் இன்றி வேத ஞானம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மேலும், கீதையின் ஒரு பகுதியை ஏற்று வேறொரு பகுதியைப் புறக்கணித்தல் என்பதும் அனுமதிக்கப்படுவதில்லை; ஏனெனில், வேத ஞானம் எல்லாவித குறைபாடுகளுக்கும் அப்பாற்பட்டது. சாதாரண மனிதன் நான்கு விதக் குறைபாடுகளுக்கு உட்பட்டவன், குறை பாடுகளுக்கு அப்பாற்பட்ட கோவிந் தனால் பிரம்மாவின் இதயத்தில் உபதே சிக்கப்பட்ட வேத ஞானத்தை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும், அர்ஜுனனைப் போன்று சுயநல ஆசைகளைக் கைவிட்டு சரணடைந்த நிலையில் கீதை ஏற்கப்பட வேண்டும்.


## கீதையைப் பயில்வதன் பலன்

நாய்களையும் பூனைகளையும் போல சண்டையிட்டுக் கொள்வதற்காக மனிதன் இவ்வுலகில் பிறக்கவில்லை. மனிதன் தனது வாழ்வின் முக்கியத்துவத்தை அறிய வேண்டும். இதற்கான வழிமுறை எல்லா வேத இலக்கியங்களிலும் உள்ளது, இதன் சாராம்சம் கீதையில் கூறப்பட்டுள்ளது. கீதையின் அறிவுரையை நாம் பின்பற்றி னால், இப்பௌதிக உலகிற்கு அப்பாலுள்ள ஆன்மீக உலகத்தை அடைய இயலும்.

இந்த பௌதிக உலகிலுள்ள அனைத்துமே தற்காலிகமானவை; ஆனால் இந்த நிரந்தரமற்ற உலகத்திற்கு அப்பாலுள்ள ஸநாதன உலகத்தைப் பற்றிய தகவல் பகவத் கீதையில் உள்ளது. ஸநாதன என்றால், நிரந்தரமானது என்று பொருள். ஸநாதனமான ஜீவன்கள் ஸநாதனமான இறைவனுடன் ஸநாதன உலகில் வசிக்க வேண்டியவர்கள். ஜீவன்களின் அக்கடமை, ஸநாதன தர்மம் எனப்படுகிறது. நிரந்தரமான அந்த தர்மத்தினை ஜீவன்களிடமிருந்து பிரிக்க முடியாது. ஸநாதன தர்மம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்களின் நம்பிக்கையோ மதப்பிரிவோ அல்ல. நீரிலிருந்து திரவத் தன்மையையும் நெருப்பிலிருந்து வெப்பத் தையும் பிரிக்க முடியாததைப் போல, ஜீவனிடமிருந்து அதன் தர்மத்தினை (தன்மையினை) பிரிக்க முடியாது.

ஜீவன்களிடமிருந்து பிரிக்கமுடியாமல் விளங்கும் தன்மை என்ன என்று நாம் ஆராய்ந்தால், ஒவ்வொரு ஜீவனிடமும் சேவை செய்யும் மனப்பான்மை இருப் பதைப் பார்க்கின்றோம். ஒவ்வொரு வரும் (கணவன், மனைவி, சமுதாயம், முதலாளி, நாய்... என) யாராவது ஒருவருக்கு சேவை செய்து கொண்டுள் ளோம். ஆனால் உண்மையில் நாம் முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணருக்கு சேவை செய்ய வேண்டியவர்கள். அவருக்கு அன்புத் தொண்டு புரியாமல், ஜீவன்கள் மகிழ்ச்சியாக இருத்தல் என்பது சாத்தியமல்ல.

கிருஷ்ணரை வழிபடுவதற்குப் பதிலாக, பல்வேறு தேவர்களைவழிபடுதல் பகவத் கீதையில் அங்கீகரிக்கப்பட வில்லை. பௌதிக ஆசைகளால் அறிவை இழந்தவர்கள் மட்டுமே தேவர்களை வழிபடுவர் என்று கூறப்பட்டுள்ளது. தேவர்களை வழிபடுவோர் தேவர்களின்



*பகவத் கீதையைப் பயில்வதன் மூலமாக பௌதிக உலகிற்கு அப்பாற்பட்ட எண்ணற்ற வைகுண்ட கிரகங்களை அடைய இயலும்.*

உலகில் பிறவி எடுப்பர். ஆனால் பிரம்ம லோகம் முதற்கொண்டு இந்த உலகிலுள்ள எல்லா கிரகங்களும் தற்காலிகமானவை. அவற்றிற்கு அப்பாலுள்ள எண்ணற்ற வைகுண்ட லோகங்களில் பகவான் தனது பக்தர்களுடன் பரமமான லீலைகளில் ஈடுபட்டுள்ளார். இந்த ஆன்மீக கிரகங்கள் எல்லாவற்றிலும் மிகவுயர்ந்த கிரகமான கோலோக விருந்தாவனம் எனும் கிரகம், மூல புருஷோத்தமரான ஸ்ரீ கிருஷ்ணரின் வாசஸ்தலமாகும். கிருஷ்ணரின் லோகம், சூரியனாலோ, சந்திரனாலோ, நெருப்பினாலோ ஒளியூட்டப்படுவதில்லை; அவையனைத்தும் சுய ஒளி கொண்ட கிரகங்கள். அங்கு நித்திய வாசம் செய்யும் கிருஷ்ணர், தன்னைப் பற்றிய மக்களின் கற்பனைகளைத் தடுப்பதற்காகவும், தனது நித்திய லீலைகளை வெளிப்படுத்தி இவ்வுலகிலுள்ள கட்டுண்ட ஜீவன்களைக் கவர்வதற்காகவும் இந்த பூவுலகில் தனது சுய ரூபத்தில் அவதரிக்கின்றார். அவர் நம்மில் ஒருவராக நம்முடன் விளையாடுவதால், மந்த புத்தியுடையோர் அவரை இழிந்துரைக்கின்றனர்; அது மிகவும் தவறு.

நாம் வாழும் இந்த பௌதிக உலகம், ஆன்மீக உலகத்தின் திரிபடைந்த பிம்ப மாகும். நிழலைப் போன்ற இவ்வுலகில் உண்மையான இன்பமோ மகிழ்ச்சியோ கிடையாது; அவை ஆன்மீக உலகில் கிடைக்கக்கூடியவை. பௌதிக வானிற்கு அப்பாற்பட்ட அவ்வுலகை அடைவதற்கு ஒவ்வொருவரும் இச்சையும் ஏக்கமும் கொள்ள வேண்டும்; ஏனெனில், அந்தத் திருநாட்டை அடைந்தவர் இப்பௌதிக உலகிற்கு மீண்டும் திரும்ப வேண்டிய தில்லை.

### அவ்வுலகை அடைவது எப்படி?

அடுத்ததாக, பரம புருஷ பகவானின் அந்த உயர்ந்த வாசஸ்தலத்தை எவ்வாறு அடைவது என்னும் கேள்வி எழலாம். மரண நேரத்தில் கிருஷ்ணரை நினைப்பவன் அவரின் லோகத்தை அடைய முடியும் என்று பகவத் கீதையில் (8.5) கொடுக்கப்பட்டுள்ளது. நமது தற்போதைய பிறவியில் இறைவனின் திருநாட்டிற்கு உயர்வு பெற நாம் நம்மைத் தயார் செய்தால், இந்த ஜடவுலகை விட்டு வெளியேறிய பின் ஆன்மீக உலகை அடைவது நிச்சயம். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று பகவான் உறுதி கூறுகிறார்.

பௌதிக எண்ணத்தில் மூழ்கியுள்ள நாம், ஆன்மீக உலகை அடைய வேண்டுமெனில், நமது எண்ணம் ஆன்மீகமாக மாற வேண்டும். செய்தித்தாள்கள், நாவல்கள், மற்றும் பல்வேறு புத்தகங்களுக்குப் பதிலாக, நமது சிந்தனையை பகவத் கீதை, பாகவதம், மஹாபாரதம் போன்ற வேத இலக்கியங்களை நோக்கித் திருப்ப வேண்டும். அதன் மூலம் மரண நேரத்தில் இறைவனை நினைப்பது சாத்தியமாகும். மனதையும் புத்தியையும் தனக்கு அர்ப்பணித்து தன்னை நினைத்தபடி, ஒவ்வொருவரும் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றும்படி கிருஷ்ணர் (8.7) அறிவுறுத்துகிறார். வெறுமனே அவரை நினைத்துக் கொண்டு, வேலைகளை எல்லாம் விட்டுவிடும்படி கிருஷ்ணர் கூறவில்லை. நடைமுறைக்கு ஒத்துவராத கருத்துகளை அவர் கீதையில் உபதேசிக்கவில்லை. வாழ்க்கைப் போராட்டத்தின் மத்தியில் கிருஷ்ணரை நினைவுகொள்ள பழகிக் கொள்ளாவிடில், மரண நேரத்தில் அவரை நினைத்தல் இயலாது. கிருஷ்ணரின் திருநாமத்தை எப்போதும் உச்சரிப்பதால் அந்நிலை எளிதில் சாத்தியமாகும்.

பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனிடம் அஷ்டாங்க யோகப் பயிற்சியைப் பற்றி விளக்கியபோது, அப்பயிற்சியை தன்னால் செய்ய இயலாது என்று அவன் கூறினான் (6.33). அதற்குப் பதிலளித்த பகவான், தனது பக்தித் தொண்டில் ஈடுபட்டிருப் பவனே உயர்ந்த யோகி (6.47) என்று கூறினார். பக்தித் தொண்டில் ஈடுபடுவதற்கு கிருஷ்ணரின் சிந்தனையில் நாம் நமது மனதையும் புத்தியையும் ஈடுபடுத்த வேண்டும்; அப்போது புலன்களும் தாமாகவே அவர்தம் தொண்டில் ஈடுபடும். மனிதன் தனது ஆயுளின் மீதமுள்ள காலத்தினை முழுமுதற் கடவுளின் நினைவில் கழிக்கப் பயிற்சி செய்ய வேண்டும். அப்பயிற்சியே பக்தி எனப்படும். பக்தியின் ஒன்பது விதமான வழிமுறைகளில், பகவத் கீதையை தகுதியுள்ள நபரிடமிருந்து கேட்டல் என்பது மிகவும் முக்கியமானதாகும். அங்குமிங்கும் அமைதியற்று அலைபாய்ந்து கொண்டிருக்கும் நமது மனம், கிருஷ்ணரின் ஒலியதிர்வில் அமைதி பெறும். கீதையின் கதவுகள் எல்லாருக்கும் திறந்துள்ளன, யாருக்கும் தடை இல்லை. அனைத்துப் பிரிவைச் சார்ந்தவர்களும் கிருஷ்ணரை அவரது நாமத்தைச் சொல்லி அணுக இயலும் (9.32–33).



*பகவத் கீதையைப் படித்தல், பகவானின் திருநாமத்தை உச்சரித்தல் போன்ற பக்திச் செயல்களின் மூலம் ஸநாதன உலகை அடைய முடியும்.*

முடிவாக, பகவத் கீதை மிகவும் கவனத்துடன் படிக்க வேண்டிய திவ்யமான சாஸ்திரமாகும். கீதையைப் படிப்பதால் ஒருவனது பூர்வ ஜன்ம பாவங்கள் அனைத்தும் அவனை விட்டு விலகி ஓடும். தன்னிடம் சரணடைபவர்களை எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் விடுவிப்பதாக கிருஷ்ணர் (18.66) உறுதியளிக்கின்றார். கங்கையில் குளிப்பதைக் காட்டிலும், கீதை என்னும் புனித கங்கையில் குளிப்பவன், தனது எல்லாக் களங்கங்களையும் கழுவிவிடுகின்றான். கீதையைப் படிப்பவர்களுக்கு வேறு எந்த நூலையும் படிக்க வேண்டிய அவசியமில்லை; இந்த ஒரு நூலே போதுமானது. எல்லா உபநிஷத்துகளின் சாரமான கீதை பசுவைப் போன்றது. அர்ஜுனன் என்ற கன்றினைக் கொண்டு, கிருஷ்ணரால் கறக்கப்பட்ட அந்த அமிர்தப் பால், அறிவு சான்றவர்களாலும் தூய பக்தர்களாலும் அருந்தப்பட வேண்டியதாகும்.

உலகம் முழுமைக்கும் பகவத் கீதை என்னும் ஒரே நூல் இருக்கட்டும்; ஸ்ரீ கிருஷ்ணர் என்ற ஒரே கடவுள் இருக்கட்டும்; ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் ஒரே மந்திரம் இருக்கட்டும்; அவருக்குத் தொண்டு செய்தல் என்னும் ஒரே செயல் இருக்கட்டும்.

(அறிமுகத்தின் இறுதியில், பகவத் கீதை உண்மையுருவில் பெறப்பட்ட குரு சீடப் பரம்பரையினை ஸ்ரீல பிரபுபாதர் பட்டியலிட்டுள்ளார்)

அடுத்த இதழில், முதல்
அத்தியாயத்தின் கண்ணோட்டம்.

## அறிமுகத்திலுள்ள ஆறு பகுதிகள்

1) பகவத் கீதையை ஏற்றுக் கொள்ள வேண்டிய விதம் (6 பக்கங்கள்)
- பரம்பரை மூலமாக
- கிருஷ்ணரிடம் சரணடைந்து
- பக்தியின் மூலமாக
- அர்ஜுனனைப் போல முழுமையாக

2) பகவத் கீதையின் நோக்கம் (பக்கம் 7–8)
- துன்பமயமான இப்பௌதிக உலகில் மக்கள் அனைவரும் அர்ஜுனனைப் போன்று குழம்பிய நிலையில் உள்ளனர்.
- பகவத் கீதை மக்களை பௌதிக வாழ்விலிருந்து விடுவிப்பதற்கானதாகும்.

3) பகவத் கீதையின் ஐந்து விஷயங்கள்—*சம்பந்த ஞானம்* (பக்கம் 8–16)
- ஈஸ்வரன், ஜீவன், பிரக்ருதி, காலம், கர்மா

4) வேத ஞானத்தைப் புரிந்துகொள்ளுதல் (பக்கம் 16–18)
- வேத வாக்கை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் (பசுஞ்சாணம்)
- வேதங்கள், நான்கு விதக் குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டவை
- அர்ஜுனனைப் போல சரணடைந்து தெரிந்துகொள்ள வேண்டும்

5) பகவத் கீதையைப் பயில்வதன் பலன்—*பிரயோஜன* (பக்கம் 18–27)
- ஆன்மீக உலகை அடையலாம்
- சேவை செய்வதே எல்லோரின் தர்மம்
- தேவர்கள் உட்பட மற்றவர்களுக்கு சேவை செய்வதைத் தவிர்க்க வேண்டும்
- தேவ லோகம் நிரந்தரமற்றது; கிருஷ்ண லோகம் நிரந்தரமானது

6) அவ்வுலகை அடைவது எப்படி?—*அபிதேய* (பக்கம் 27–37)
- மரண நேரத்தில் பகவானை நினைக்க வேண்டும்
- ஒவ்வொரு செயலையும் பகவானுக்காகச் செய்வதால், மரண நேரத்தில் அவரை நினைக்க முடியும்
- ஒன்பது வித சேவையைச் செய்ய வேண்டும்
- அனைவருக்கும் சாத்தியமான வழிமுறை—மஹாமந்திர உச்சாடனம்
- கீதா மஹாத்மியம்

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன.

# புத்தக விநியோகம்

காலத்தால் அழியாத சிறப்பு வாய்ந்த ஆன்மீக இலக்கியங்களை ஸ்ரீல பிரபுபாதர் நவீன கால மக்களும் புரிந்துகொள்ளும் விதத்தில் எளிமையான மொழியில் வழங்கியுள்ளார். மக்களுக்கு கிருஷ்ண பக்தி வழங்குவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ள இஸ்கான், அதற்காக ஆற்றும் திருப்பணிகளில் மிகவும் முக்கியமானது புத்தக விநியோகம். அவரது புத்தகங்கள் 80க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இஸ்கான் பக்தர்களால் உலகெங்கிலும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 50 கோடி புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை உலகிலேயே மிகப்பெரிய ஆன்மீக புத்தக வெளியீட்டாளராகத் திகழ்கின்றது. மேலும், தற்போதைய கணக்கின்படி ஒவ்வொரு 6 விநாடிக்கும் உலகின் ஏதாவதொரு பகுதியில் பிரபுபாதரின் புத்தகத்தினை ஓர் அதிர்ஷ்டசாலி பெறுகின்றார். குறிப்பாக, டிசம்பர் மாதத்தில் இஸ்கான் பக்தர்கள் அனைவரும் தீவிர புத்தக விநியோகத்தில் ஈடுபடுவர். ஒருமுறை செர்வின்/வில்லியம்ஸ் நிறுவனத்தின் பெயின்ட் விளம்பரத்தை ஸ்ரீல பிரபுபாதர் பார்த்தார். பூமி உருண்டையின் மீது பெயின்ட் ஊற்றப்படுவது போன்று அவ்விளம்பரம் வடிவமைக்கப்பட்டிருந்தது. ''உலகம் முழுவதும் நாங்கள் பரவியுள்ளோம்'' என்ற வாசகம் பெரிய அளவில் எழுதப்பட்டிருந்தது. ''இதைத்தான் நாமும் விரும்புகிறோம். மொத்த உலகையும் கிருஷ்ண உணர்வினால் நிரப்ப வேண்டும்,'' என்று ஸ்ரீல பிரபுபாதர் கருத்து தெரிவித்தார்.

உலகம் முழுவதும் கிருஷ்ண பக்தியை வழங்குவதற்காக ஸ்ரீல பிரபுபாதர் புத்தக விநியோகத்தினை மிகவும் வலியுறுத்தினார். புத்தக விநியோகம் குறித்த ஸ்ரீல பிரபுபாதரின் சில கூற்றுகள்:

''இப்புத்தகங்களும் பத்திரிகைகளும், அறியாமை என்னும் மாயையின் தாக்குதலைத் தோற்கடிப்பதற்கான முக்கிய ஆயுதங்களாகும். இவற்றை எந்த அளவிற்கு அதிகமாக பிரசுரித்து உலகெங்கிலும் பரவலாக விநியோகம் செய்கின்றோமோ, அந்த அளவிற்கு இவ்வுலகினை நம்மால் அழிவிலிருந்து விடுவிக்க முடியும்.'' (கடிதம், நவம்பர் 18, 1972)

''புத்தகத்தை வாங்குபவன் ஒரே ஒரு ஸ்லோகத்தை அல்லது ஒரு வரியைப் படித்தால்கூட அவனது வாழ்க்கை வெற்றியடையும். இவையனைத்தும் அவ்வளவு அற்புத மானவை. எனவே, நாங்கள் மிகவும் வலியுறுத்துகிறோம், தயவுசெய்து புத்தகங்களை விநியோகியுங்கள், புத்தகங்களை விநியோகியுங்கள், புத்தகங்களை விநியோகியுங்கள்.'' (உபன்யாசம், ஜனவரி 5, 1974)

''நமது முதல் திருப்பணி இந்த புத்தக விநியோகமே. வேறு எந்தப் பணிக்கும் அவசியம் இல்லை. புத்தக விநியோகம் சீராக நிர்வகிக்கப்பட்டு, உறுதியுடனும் உற்சாகத்துடனும் நடத்தப்பட்டு, நமது பக்தர்கள் தங்களது ஆன்மீக வளர்ச்சியையும் பார்த்துக் கொண்டால், முழு உலகமும் கிருஷ்ண உணர்வைப் பெறும்.'' (உபன்யாசம், ஜனவரி 5, 1976)

### உண்மையான அகிம்சை

''அகிம்சை என்பது, உடலைக் கொல்லாமலிருப்பது அல்லது அழிக்காமலிருப்பது என்ற பொருளில் பொதுவாக உபயோகிக்கப்படுகின்றது, ஆனால் உண்மையில், அகிம்சை என்றால், பிறரை துன்பத்திற்கு உள்ளாக்காமல் இருப்பது என்று பொருள். பொதுவாக, பௌதிகமயமான வாழ்வு என்னும் அறியாமையினால், மக்கள் பிணைக்கப்பட்டுள்ளனர், இதனால் அவர்கள் இடையறாது ஜடத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். எனவே, ஆன்மீக ஞானத்தின் தளத்திற்கு ஒருவன் மக்களை உயர்த்தாவிடில், அவன் ஹிம்சையையே பயிற்சி செய்கிறான். மக்களிடம் உண்மையான ஞானத்தை விநியோகிப்பதற்கு ஒருவன் தன்னால் இயன்ற அளவு முயற்சி செய்ய வேண்டும், அதன் மூலம் மக்கள் தெளிவுபெற்று இந்த ஜடவுலக பந்தத்திலிருந்து விடுதலை பெற முடியும். இதுவே அகிம்சை எனப்படும். (பகவத் கீதை 13.12, பொருளுரை)



புத்தக விநியோகத்தில் ஈடுபட்டுள்ள இஸ்கான் பக்தர். இடம்: ரஷ்யா

கீழ்க்காணும் தகவல் கிருஷ்ண பக்தர்களின் தொண்டிற்கு உதவியாக இருக்கும் என்று பிரார்த்திக்கின்றோம்...

# Hare Krishna Bhakta Seva Sangh,

418 B, K.P. Road, R.V. Puram, Nagarcoil. Kanyakumari Dist- 629002
Email: harekrishnabhaktasevasangh@gmail.com

**Hare Krishna Bhakta Seva Sangh** is formed for serving vaishnavas in different forums. We are launching this **matrimonial service** as per the request of H.H. Jayapataka Swami Maharaja through H.G. Mahavaraha dasa.

Interested devotees can submit a form as per the below sample and send it across to the above address along with recent photograph and horoscope.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

SAMPLE FORMAT (fill in capital letters)

| | |
|---|---|
| Name: | |
| Parents name and profession: | |
| Residential Address: | |
| Official position and Address:<br>(if self employed give details) | |
| Age & Date of Birth: | |
| Place of Birth: | |
| Educational Qualification along with place of education and languages known with level of proficiency: | |
| Spiritual Status: (I initiated, II initiated, along with your spiritual master's name) | |
| Details of family member:<br>(Please mention like dependents of you etc.) | |
| If specific about partner from same caste please mention: | |
| Spiritual authority's name, designation, signature and contact number: | |
| Specific expectation from life partner: | |
| Contact person's number and email: | |
| Services done in ISKCON: | |

I hereby assure that the information provided here is correct to my full knowledge. Also, I understand that any information provided by Seva Sangh need to be verified by the applicant personally.

Applicant's Signature Date : Place :


தமிழில் உள்ள
ஒரே முழுப் பதிப்பு
அனைத்து இஸ்கான்
கோவில்களிலும் கிடைக்கும்.
மேலும் விவரங்களுக்கு, 98948 14553
சர்வ வேதாந்த சாரம் எனப்படும்
ஸ்ரீமத் பாகவதம்
பக்தி, யோகம், தியானம் போன்றவற்றின் முழுமையான கலைக்களஞ்சியம்
288 வண்ணப்படங்கள்
12 காண்டங்கள், 18 புத்தகங்கள்
16,000 பக்கங்களுக்கு மேல்
18,000 ஸ்லோகங்களும் அடங்கியது
அனைத்து வேத இலக்கியங்களின் தலைசிறந்த மணிமகுடமாகத் திகழும் ஸ்ரீமத் பாகவத மஹா புராணம். வேதங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகும். இது சாக்ஷாத் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இலக்கிய அவதாரம். வேதாந்த சூத்திரத்திற்கு வேத வியாசரே அளித்த இயற்கையான விளக்கவுரை.
பிரபஞ்சத்தின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் படைப்பு, கோள்களின் நிலை, படைப்பின் மூல தத்துவம், இறை விஞ்ஞானம், முக்தி, இறுதி இலக்கு, மற்றும் பல விஷயங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கக்கூடிய களங்கமற்ற புராணம்.
புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த அனுபவமான ஸ்ரீமத் பாகவதம், பரமஹம்ஸ நிலையில் உள்ளவர்களும் சுவைக்கக்கூடிய அமிர்தமாகும்.
ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் அதன் மூல சமஸ்கிருத வடிவம், தமிழ் வடிவம், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம், மொழிபெயர்ப்பு, மற்றும் தெளிவான பொருளுரைகளை வழங்கும் செம்மையான நூல்கள்.

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகாரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் அத்தியாயம், ஸ்லோகம் 15

யத்-பாத-ஸம்ஷ்ரயா: சூத முனய: ப்ரஷமாயனா:
ஸத்ய: புனந்த் யுபஸ்ப்ருஷ்டா: ஸ்வர்துன்-யாபோ 'னுஸேவயா

### மொழிபெயர்ப்பு

ஓ சூதரே, பகவானின் தாமரைப் பாதங்களில் பூரணமாக புகலிடம் கொண்டவர்களான அச்சிறந்த முனிவர்களால், தங்களுடன் தொடர்பு கொள்பவர்களை உடனே புனிதப்படுத்திவிட முடியும். ஆனால் கங்கை நீரோ தொடர்ந்த உபயோகத்திற்குப் பிறகே புனிதமடையச் செய்கிறது.

### பொருளுரை

புனித நதியான கங்கையின் நீரைவிட பகவானின் தூய பக்தர்கள் அதிக சக்திவாய்ந்தவர்களாக உள்ளனர். கங்கை நீரை தொடர்ந்து உபயோகித்த பின், ஒருவரால் ஆன்மீக நன்மையைப் பெற முடியும். ஆனால் பகவானுடைய தூய பக்தனின் கருணையினால் ஒருவர் உடனே புனிதமடைய முடியும். ஒருவர், சூத்திரனாக, பெண்ணாக அல்லது வைசியராகப் பிறந்திருந்தாலும், அவர் பகவானின் தாமரைத் திருவடிகளில் புகலிடம் கொண்டு, பரம புருஷரிடம் திரும்பிச் செல்லலாம் என்று பகவத் கீதை கூறுகிறது. பகவானின் தாமரைத் திருவடிகளில் புகலிடம் கொள்வது என்றால், தூய பக்தர்களிடம் புகலிடம் கொள்வதாகும். தொண்டு செய்வதை மட்டுமே தொழிலாகக் கொண்ட தூய பக்தர்கள், பிரபுபாதர், விஷ்ணுபாதர் போன்ற திருநாமங்களால் கௌரவிக்கப்படுகின்றனர்; இத்தகைய பக்தர்கள் பகவானுடைய தாமரை பாதங்களின் பிரதிநிதிகள் என்பதையே இது குறிக்கிறது. எனவே, தூய பக்தரின் தாமரைத் திருவடிகளில் புகலிடம் கொண்டு அவரைத் தமது ஆன்மீக குருவாக ஏற்றுக்கொள்பவர் யாராக இருந்தாலும், அவரால் உடனே தூய்மையடைய முடியும். பகவானின் தூய பக்தர்கள் பகவானுக்கு சமமாக கௌரவிக்கப்படுகின்றனர்; ஏனெனில், வீழ்ச்சியுற்ற ஆத்மாக்களை ஜடவுலகிலிருந்து விடுவித்தல் என்னும் மிக இரகசியமான பகவத் தொண்டில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர், அத்தகு வீழ்ச்சியுற்ற ஆத்மாக்கள் தம்மிடம் திரும்பி வர வேண்டும் என்பது பகவானின் விருப்பமாகும். சாஸ்திரங்களின்படி இத்தகைய தூய பக்தர்கள், பகவானின் உதவியாளர்களாக அறியப்படுகின்றனர். தூய பக்தரின் உண்மையான சீடனொருவன் ஆன்மீக குருவை பகவானுக்கு நிகராக கருதுகிறான், ஆனால் தன்னை அவன் பகவானின் சேவகனின் சேவகனாகவே எப்பொழுதும் கருதுகிறான். இதுவே தூய பக்திப் பாதையாகும்.

### ஸ்லோகம் 16

கோ வா பகவதஸ் தஸ்ய புண்ய-ஷ்லோகேட்ய-கர்மண:
ஷுத்தி-காமோ ந ஷ்ருணுயாத் யஷ: கலி-மலாபஹம்

### மொழிபெயர்ப்பு

கலி யுகத்தின் களங்கங்களிலிருந்து விடுபட விரும்பி, அதே சமயம் பகவானின் மாசற்ற மகிமைகளைக் கேட்க விரும்பாதவர், யாராவது உண்டோ?

### பொருளுரை

சச்சரவுகள் நிறைந்திருப்பதால் கலி யுகம் மிகவும் நிந்தனைக்குரிய யுகமாகும். மிகச்சிறிய பிரச்சனை ஏற்பட்டாலும் மிகப்பெரிய சண்டையே உருவாகும் அளவிற்கு, கலி யுகம் தீய பழக்கவழக்கங்களால் நிரம்பியுள்ளது. சுய முன்னேற்றத்தில் ஆர்வமற்று, பலன்நோக்குச் செயல்களின் விளைவுகளிலிருந்தும் வறட்டு தத்துவக் கற்பனைகளிலிருந்தும் விடுபட்டு, பகவானின் தூய பக்தித் தொண்டில் ஈடுபட்டிருப்பவர்கள், சிக்கலான இந்த யுகத்தின் தீமைகளிலிருந்து வெளியேறுவதற்குத் தகுதி பெற்றவர்களாவர். அமைதியுடனும் நட்புடனும் வாழ மக்கள் தலைவர்கள் மிகவும் ஆவலுள்ளவர்களாக உள்ளனர். ஆனால் பகவானின் புகழைக் கேட்டல் என்னும் எளிய வழிமுறையைப் பற்றிய தகவல் அவர்களிடம் இல்லை. மாறாக, அத்தகு தலைவர்கள் பகவானின் புகழைப் பரப்புவதை எதிர்க்கின்றனர். வேறு விதமாகக் கூறினால், அந்த முட்டாள் தலைவர்கள் பகவானின் இருப்பையே முற்றிலும் மறுக்க விரும்புகின்றனர். மதச்சார்பற்ற நாடு என்ற பெயரில் இத்தகைய தலைவர்கள் வருடந்தோறும் பல்வேறு திட்டங்களை உருவாக்குகின்றனர். ஆனால், முன்னேற்றத்திற்கான இத்திட்டங்கள் அனைத்தும் பகவானின் வெல்லமுடியாத சிக்கலான ஜட இயற்கையால்

தொடர்ந்து முறியடிக்கப்பட்டு வருகின்றன. அமைதி மற்றும் நட்பிற்கான அவர்களது எல்லா முயற்சிகளும் தோல்வியடைகின்றன என்பதைக் காண அவர்களுக்குக் கண்கள் இல்லை. ஆனால் அத்தடையைக் கடப்பதற்குரிய சிறு குறிப்பு இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. நாம் உண்மையான அமைதியை விரும்பினால், பரம புருஷ பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை அறிவதற்குரிய பாதையை நாம் திறந்து, ஸ்ரீமத் பாகவதத்தின் பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ள அவரது புகழ்மிக்க செயல்களை நாம் போற்றிப் புகழ வேண்டும்.

## ஸ்லோகம் 17

*தஸ்ய கர்மாண் யுதாராணி பரிகீதானி ஸூரிபி:*
*ப்ரூஹி ந: ஷ்ரத்ததானானாம் லீலயா ததத: கலா:*

### மொழிபெயர்ப்பு

அவரது தெய்வீகச் செயல்கள் அற்புதமும் கவர்ச்சியும் கொண்டவை. நாரதரைப் போன்ற கற்றறிந்த மாமுனிவர்கள் அவற்றைப் பாடுகின்றனர். ஆகவே, பல்வேறு அவதாரங்களில் அவர் ஆற்றிய சாகசச் செயல்களைப் பற்றிக் கேட்க ஆவலாக உள்ள எங்களிடம் அவற்றைக் கூறுவீராக.

### பொருளுரை

பரம புருஷ பகவான் செயலற்று இருப்பதாக சில குறைமதியாளர்கள் அறிவுறுத்துகின்றனர்; ஆனால் அஃது உண்மையல்ல. அவரது செயல்கள் அற்புதமும் தாராள எண்ணமும் கொண்டவை. பௌதிகம், ஆன்மீகம் ஆகிய அவரது இரு படைப்புகளும் அற்புதமானவை; மேலும், அவை பல்வேறு வகைப்பட்டவை. முக்தி பெற்ற ஆத்மாக்களான ஸ்ரீல நாரதர், வியாசர், வால்மீகி, தேவலர், அஸிதர், மத்வர், ஸ்ரீ சைதன்யர், ராமானுஜர், விஷ்ணு ஸ்வாமி, நிம்பார்கர், ஸ்ரீதரர், விஸ்வநாதர், பலதேவர், பக்திவினோதர், சித்தாந்த சரஸ்வதி மற்றும் பல்வேறு இதர கற்றறிந்த தன்னுணர்வு பெற்ற ஆத்மாக்களால் அவை நன்றாக விளக்கப்பட்டுள்ளன. பௌதிகம், ஆன்மீகம் ஆகிய இரண்டு சிருஷ்டிகளுமே செல்வம், அழகு மற்றும் அறிவினால் நிறைந்துள்ளன. ஆனால் ஆன்மீக பிரதேசமோ அறிவு, ஆனந்தம் மற்றும் நித்தியத்துவத்தில் பூரணமாக இருப்பதால், அது மிகவும் அற்புதமானதாக இருக்கிறது. பௌதிகப் படைப்புகள், ஆன்மீக இராஜ்யத்தின் பிம்பமாக சில காலத்திற்கு தோற்றுவிக்கப்பட்டுள்ளன, இவற்றை திரைப்படங்களுடன் ஒப்பிடலாம். போலியான பொருள்களால் கவரப்படும் குறைமதியாளர்களை அவை ஈர்க்கின்றன. இத்தகைய முட்டாள்களிடம் உண்மையைப் பற்றிய தகவல் கிடையாது, போலியான ஜடத் தோற்றமே எல்லாம் என்று அவர்கள் முடிவு செய்து விடுகின்றனர். ஆனால், வியாசர், நாரதர் போன்ற முனிவர்களால் வழிநடத்தப்படும் நிறைமதியாளர்கள், நித்தியமான பகவானின் இராஜ்ஜியம் அதிக இன்பமூட்டக்கூடியது, மிகப்பெரியது, நித்தியமான பூரண ஆனந்தமும் அறிவும் உடையது என்பதை அறிவார்கள். பகவானுடைய செயல்களிலும் அவரது தெய்வீகமான உலகத்தைப் பற்றிய அறிவிலும் அனுபவமற்றவர்களுக்கு பகவான் தனது அவதார சாகசங்களின் மூலம் சில சமயங்களில் அருள்பாலிக்கின்றார்; அப்போது, தெய்வீக உலகிலுள்ள தமது சகவாசத்தின் நித்திய ஆனந்தத்தை அவர் இங்கு வெளிப்படுத்துகின்றார். இத்தகைய செயல்களால் பௌதிக உலகின் பந்தப்பட்ட ஆத்மாக்களை அவர் ஈர்க்கின்றார். இக்கட்டுண்ட ஆத்மாக்களில், சிலர் பொய்யான பௌதிகப் புலன் இன்பத்திலும், மற்றவர்கள் ஆன்மீக உலகிலுள்ள தங்களது உண்மையான வாழ்வை மறுப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். குறைமதியாளர்களான இவர்கள் 'கர்மிகள்' அல்லது பலனை எதிர்பார்த்துச் செயல்படுவோர் என்றும், 'ஞானிகள்' அல்லது வறட்டு மனக் கற்பனையாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆனால் இவ்விரு பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் மேலாக, ஸாத்வதர் அல்லது பக்தர் என்று அழைக்கப்படும் ஆன்மீகவாதி உள்ளார், இவர் தீவிரமான ஜடச் செயல்களிலோ ஜடக் கற்பனைகளிலோ ஆழ்ந்தவர் அல்ல. இவர் நிலையான பகவத் தொண்டில் ஈடுபட்டுள்ளதால், கர்மிகளும் ஞானிகளும் அறிந்திராத மிகவுயர்ந்த ஆன்மீக நன்மையைப் பெறுகின்றார்.

பௌதிகம், ஆன்மீகம் ஆகிய இரு உலகங்களுக்கும் பரம ஆளுநராகிய பகவானுக்குப் பலதரப்பட்ட பிரிவுகளில் எண்ணற்ற அவதாரங்கள் உள்ளன. பிரம்மா, ருத்ரன், மனு, பிருது, வியாசர் போன்றவர்கள் பகவானின் பௌதிக குணத்தைப் பிரதிநிதிக்கும் அவதாரங்களாவர். ஆனால் இராமர், நரசிம்மர், வராஹர், வாமனர் போன்றோர் அவரது தெய்வீக அவதாரங்களாவர். எல்லா அவதாரங்களுக்கும் பிறப்பிடமாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் திகழ்கிறார். எனவே, அவரே எல்லா காரணங்களுக்கும் மூல காரணமாவார்.

## ஸ்லோகம் 18

*அதாக்யாஹி ஹரேர் தீமான்ன் அவதார-கதா: ஷுபா:*
*லீலா விததத: ஸ்வைரம் ஈஷ்வரஸ்யாத்ம-மாயயா*

### மொழிபெயர்ப்பு

விவேகியான சூதரே, பரம புருஷனின் பலவகையான அவதாரத்தின் தெய்வீக லீலைகளை தயவுகூர்ந்து எங்களுக்கு விவரிப்பீராக. பரம ஆளுநரான பகவானின் இத்தகைய மங்களகரமான சாகசங்களும் திருவிளையாடல்களும் அவரது அந்தரங்க சக்திகளால் நிறைவேற்றப்படுகின்றன.

### பொருளுரை


பௌதிக உலகங்களைப் படைத்து, காத்து, அழிப்பதற்காக பரம புருஷ பகவான் தாமே பல்லாயிரக்கணக்கான ரூபங்களில் அவதரிக்கிறார். அந்த உன்னதமான ரூபங்களால் வெளிப்படுத்தப்படும் குறிப்பிட்ட சாகசங்கள் சர்வ மங்களம் கொண்டவையாகும். அச்செயல்களின்போது அவருடன் இருப்பவர்கள், அச்செயல்களின் தெய்வீக வர்ணனைகளைக் கேட்பவர்கள் ஆகிய இரு பிரிவினருமே நன்மையடைகின்றனர். (தொடரும்)

**இடது:** நவம்பர் 7, 2010—"நியூ கோகுலம்" என்ற பெயரில் இலண்டனில் உள்ள இஸ்கான் கோவிலில் அமைக்கப்பட்டுள்ள புதிய கோசாலையினை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சட்ட ஆலோசகரான திரு.ஹோன் டோமினிக் கிரிவ் அவர்களும், தவத்திரு. பக்தி சாரு ஸ்வாமியும் திறந்து வைத்த காட்சி. **வலது:** கோசாலையில் துள்ளிக் குதித்து ஓடிவரும் மாடுகள்.

நிகழ்ச்சியில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பல்வேறு உறுப்பினர்களும் நேபாள நாட்டின் தூதுவரும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். 105 ஏக்கரில் 44 மாடுகளுடன் தொடங்கப்பட்டுள்ள இந்த கோசாலையில் பசுக்களும் காளைகளும் இயற்கையான முறையில் பராமரிக்கப்படுகின்றன.

## இந்த ஒரு வாழ்க்கையை கிருஷ்ணருக்காக அர்ப்பணியுங்கள் – ஸ்ரீல பிரபுபாதரின் வேண்டுகோள்



எண்ணிலடங்காத காலந்தொட்டு, கட்டுண்ட ஜீவன்கள் அனைவரும் தங்களது அனைத்து சேவையையும் சக்தியையும் மாயையின் பணியில் ஈடுபடுத்தியுள்ளனர். நான் விடுக்கும் வேண்டுகோள் என்னவெனில், இந்த ஒரு வாழ்க்கையில் நீங்கள் உங்களது முழு சக்தியையும் கிருஷ்ணரின் தொண்டில் அர்ப்பணியுங்கள். ஆன்மீக சக்தி நித்தியமானது என்பதால், கிருஷ்ணருக்காக ஒரு ஆயுளை வழங்குவது கடினமல்ல. பக்தித் தொண்டை நிறைவேற்றுவதில் நாம் தீவிரமாக இருந்தால், இந்த ஒரு பிறவியில் கிருஷ்ணருக்கு நாம் செய்யும் தொண்டானது நம் வாழ்வின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் நிரந்தரத் தீர்வை நல்கும். ஒரே ஒரு பிறவியில் தீவிரமான பக்தித் தொண்டு செய்தால்கூட, அஃது ஒருவனை நிரந்தரமாக வைகுண்ட லோகத்திற்கு அழைத்துச் செல்லும் தகுதி வாய்ந்ததாகும். கிருஷ்ண பக்தி அத்தகு சக்தி வாய்ந்தது.

—மதுத்விஷருக்கு ஸ்ரீல பிரபுபாதர் எழுதிய கடிதம், ஹேம்பர்க், 7,செப்டம்பர், 1969

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(டிசம்பர் 1, 2010 முதல் ஜனவரி 15, 2011 வரை)**

### டிசம்பர்

2, வியாழன், உத்பன்ன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:18–10:09
ஸ்ரீ நரஹரி சர்கார் மறைவு நாள்

17, வெள்ளி, மோக்ஷத ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:26–10:16
ஸ்ரீமத் பகவத் கீதை உபதேசிக்கப்பட்ட நாள்

25, சனி, ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் மறைவு நாள்
மதியம் வரை விரதம்

31, வெள்ளி, சபல ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:33–10:23
ஸ்ரீ தேவானந்த பண்டிதர் மறைவு நாள்

### ஜனவரி

5, புதன், ஸ்ரீ லோசன தாஸ் தாகூர் தோன்றிய நாள்

7, வெள்ளி, ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி மறைவுநாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

---

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jai.gopinath.jps@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.


இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.




காலம் நாம் நினைப்பதைக் காட்டிலும் விரைவாகச் செல்கிறது. உங்களது மகன், "வாழ்க்கை என்பது என்ன? வாழ்வின் குறிக்கோள் என்ன?" என்று யோசிக்கும் நாள் விரைவில் வந்துவிடும். அதற்கான விடையினை அறிய அவன் உங்களை அணுகும்போது, நீங்கள் என்ன சொல்வீர்கள்? உங்களுடைய சொந்த அபிப்பிராயத்தை சொல்வீர்களா? இதெல்லாம் தேவையில்லை என்று கூறி, பேச்சை மாற்றி விடுவீர்களா? அல்லது அதற்கான பதில் உண்மையிலேயே உங்களுக்குத் தெரியுமா?

தன்னைச் சார்ந்திருப்பவர்களை பௌதிக வாழ்வின் பந்தத்திலிருந்து விடுவிக்கத் தகுதியில்லாத நபர், ஆன்மீக குருவாக, தலைவராக, ஆசிரியராக, அல்லது பெற்றோராக ஆகக் கூடாது என்று வேத இலக்கியங்கள் கூறுகின்றன.

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்காக மற்றெல்லா நன்மைகளைச் செய்தாலும், வாழ்வின் பந்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு உதவி செய்யாவிடில், அவர்கள் தங்களது கடமையிலிருந்து தவறியவர்களே. எனவே, ஒவ்வொரு பெற்றோரும் பகவத் கீதையின் மூலம் வாழ்வின் குறிக்கோளை அறிந்து அதனை தங்களது குழந்தைகளுக்கும் பயிற்றுவித்தல் அவசியம்.




# பகவத் கீதை உண்மையுருவில்

- உலகிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற பகவத் கீதை
- குரு சீடப் பரம்பரையில் வரும் பக்குவ ஞானம்
- 56 மொழிகளில் கிடைக்கக்கூடியது
- 944 பக்கங்கள், 16 வண்ணப்படங்கள்

உங்கள் பிரதியைப் பெற அருகிலுள்ள இஸ்கான் கோவிலைத் தொடர்புகொள்ளவும், அல்லது 98948 14553 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.




தங்கமயில்
தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க
124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

இராஜபாளையம்
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

தூத்துக்குடி
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553